பக்கங்கள்: 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 9 ஞாயிற்றுக்கிழமை (23-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:117

# ஈராக்கிய நகரங்கள் இரண்டு அமெரிக்கப் படைகள் வசமாகின

## பக்தாத் நோக்கித் தொடர்ந்து இராணுவம் முன்னேறுகின்றது



குவைத்சிற்றி,மார்ச்23

சதாமின் ஆட்சியை அகற்றும் நோக்குடன் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஈராக்கில் ஆரம்பித்துள்ள 'ஈராக் சுதந்திரத்துக்கான நடவடிக்கை'யில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்த தரைவழித் தாக்குதலில் தெற்கு ஈராக்கிய பகுதியில் இருந்த முக்கிய நகர்களான பஸ்ரா மற்றும் நஸீரியாவைக் கைப்பற்றியுள்ளன.

**ஈராக்கிய பாலைவனங்களையும் பிரதான நகரப் பகுதிகளையும் பிரிக்கும் யூப்ரடீஸ் ஆற்றின் கரையோரமாக உள்ள முக்கிய நிலைகள் இரண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாக கூட்டுப் படைகள் அறிவித்துள்ளன. துறைமுக நகரான உம்-ஹஸாரும் நேற்று இரவுக்குள் அமெரிக்கப் படைகள் வசம் வீழ்ந்துவிடும் நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.**

ஈராக்கிய தலைநகர் பக்தாத் நோக்கி படைகள் தொடர்ந்தும் முன்னேறிவருகின்றன. மூன்றாவது நாளாக பக்தாத் நகரம் மீது கடுமையான ஏவுகணைத் தாக்குதலும் சரமாரியான விமானக் குண்டுவீச்சுக்களும் இடம்பெற்றன. அந்த நகரம் கிட்டத்தட்ட குண்டு வீச்சுக்களால் இடிந்து தரைமட்டாகியுள்ளது. வெள்ளிக்கிழமை மட்டும் பக்தாத்தை இலக்கு வைத்து 1,000 குரூஸ் ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்ரகன் அறிவிததது.

மூன்றாவது நாளாக கடும் தாக்குதல் நடத்தியபடி முன்னேறிவரும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் நேற்றுப் பகலில் நஸீரியா நகரைக் கைப்பற்றின. தெற்கு ஈராக்கில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்று இது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஐந்து சந்திப் பகுதியில் நேற்று பரவலாக மோதல்கள்

### 15 பேர் படுகாயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று முழுநாளும் பரவலாக இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 15 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். பெறுமதிவாய்ந்த சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

ஐந்து சந்தி பெரிய பள்ளிவாசல் பகுதியில் வசித்துவரும் இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களிடையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் நேற்றிரவு முழுவதும் பெரும் பதற்றம நிலவியது. இதனை அடுத்து அங்கு விரைந்த பொலீஸார் மோதலில் ஈடுபட்டவர்களை சமரசப் படுத்த முயன்றனர். எனினும் அம்முயற்சி பலனளிக் கவில்லை எனக் கூறப்பட்டது.

மோதல் மேலும் தீவிரமடையவே அப்பகுதியிலுள்ள காவலரணில் இருந்த படையினர் நேற்றிரவு 11

(12ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி -இரத்மலானை இடையே 35 நிமிட நேரத்தில் பயணம்

### புதிய சிறியரக விமானம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

பலாலியில் இருந்து இரத்மலானைக்கு 35 நிமிடத்தில் செல்லக்கூடிய சிறியரக விமானம் ஒன்றின் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

17 பேர் பயணம் செய்யக்கூடிய வசதியுடைய. இந்த விமானத்தின் சேவை தினமும் 6 தடவைகள் இடம்பெறவுள்ளன.

இந்தச் சேவையை நடத்தும் 'செரன்டிப்' நிறுவனத்தின் தலைவர் எஸ்.சிவதாசன் மற்றும் அந்நிறுவனங்களின் யாழ்., கொழும்பு முகவர்கள் முன்னிலையில் பலாலி விமானத் தளத்தில் இந்த விமானத்தின் வெள்ளோட்டம நேற்று இடம்பெற்றது.

. குறித்த ஒரு தினத்தில் பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டவர் அன்றைய தினம் இடம்பெறும் ஆறு சேவைகளில் எந்தச் சேவையிலும் பயணம் செய்ய முடியும் என்றும் -

இந்தச் சேவைக்கு குறைந்த கட்டணமே அறவிடப்படும் என்றும் - அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## யாழ்.குடாநாட்டுக்கு விரைவில் பிரதமர் விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமையை நேரில் அறிவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் இங்கு வரவிருக்கின்றார்.

அமைச்சரவையில் அங்கம்வகிக்கும் முக்கிய அமைச்சர்கள் சகிதம் யாழ்ப்பாணம் வரவுள்ள பிரதமர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறார்.

பிரதமரின் விஜயம் எப்போது இடம்பெறும் என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படாத போதும், புத்தாண்டுக்கு முன்னர் அவரின் விஜயம் இடம்பெறும் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு ஜனவரியிலும் பிரதமர் முதற்றடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

(ம-3)

## மாநகரசபையின் காணிகள் படைமுகாமுக்கு சுவீகரிப்பு?

### எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான மாநகர சபை வளாகம் மற்றும் சுப்பிரமணியம் பூங்கா அமைந்துள்ள காணி ஆகியவற்றைப் படைமுகாம் அமைப்பதற்கு, சுவீகரிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்து எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நகர மத்தியில் படைமுகாம் அமைக்க அரச சார்பற்ற இணையம் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்மாநகர சபை வளாகம் மற்றும சுப்பிரமணியம் பூங்கா அமைந்துள்ள பகுதியில் படைமுகாம்கள் அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளை யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகளிடம் இக்கண்டனத்தை இணையப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இணையத்தின் அலுவலகத்துக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளின் பலனாக

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த வாய்ப்பு

### சட்டத்தரணிகள் சங்க தலைவர் பதவியேற்பு நிகழ்வில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்23

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் பயனாக, வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. இதற்கு விடுதலைப்புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

- இப்படிக் கூறினார் பிரதமர்.ரணில் விக்கிரமசிங்க.

சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் பதவியேற்கும் நிகழ்வு நேற்று மாலை மவுண்லவேனிய ஹோட்டலில் நடைபெற்றது. அதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே பிரதமர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமாக அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்களில் இறுதியாக டோக்கியோவில் முடிவடைந்த 6ஆம் கட்டப் பேச்சுக்களில் நல்ல முன்னேற்றகரமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடத்த விடுதலைப்புலிகள் இணங்கியுள்ளனர். இதன் மூலம் நீண்டகாலமாக அந்தப்பிரதேசத்தில் இயங்காதிருந்த சபைகளும் இயங்க வாய்ப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்காக ஜப்பான் சென்ற புலிகளின் பிரதிநிதிகள் ஹிரோஷிமாவை பார்த்தனர்

ஹொங்கொங்,மார்ச்23

ஜப்பானில் நடந்த ஆறாம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றச் சென்ற விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவினர், 2ஆம் உலக மகாயுத்தத்தின் போது அணுகுண்டு வீச்சால் அழிக்கப்பட்டு மீளக்கட்டியெழுப்பப்பட்டுள்ள ஹிரோஷிமா நகரத்தை நேற்று பார்வையிட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021-2225408

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666



# உச்சக் கட்டம்

கிரிக்கெட் கொண்டாட்டத்தின் உச்சம் - 'கிளைமாக்ஸ்' - இன்று. ஆஸ்திரேலியர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையில் மோதல். வெல்பவருக்கு கிண்ணம். தோற்பவருக்கு சோகம். விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம். எனினும், எப்போதுமே இத்த கைய போட்டிகளில் தோல்வி தாங்கமுடியாதது. பல கோடி ரசிகர்களின் இதயத் துடிப்பை எகிறவைக்கும் இறுதித் தருணம் இது. கடந்த ஒரு மாதமாகக் காத்திருந்த நாள் வந்தாயிற்று. இன்று முடிந்து போனால், இனிவரும் நான்கு வருடங்களுக்கு இதுபற்றிக் கதையில்லை. வென்றவர்கள் அவ்வளவு காலத்துக்கும் நாயகர்கள்.

தொடர் வெற்றிகளுடன் சாதனை நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது ஆஸ்திரேலியா. நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று அவர்களின் பின்னால் 6 தொடர் வெற்றிகளுடன் நிற்கின்றார்கள் இந்தியர்கள். ... கோடி ரசிகர்களின் இதயத் துடிப்பு அவர்களுக்கு ... தென்னாபிரிக்கா வரைக்கும் கேட்கும். ஆஸ்திரேலியர்களுக்கு இப்போது கிரிக்கெட்டை விட ஈராக் கின் போர் ஒலி இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்திருக்கிறது. அதில் அவர்கள் பங்காளிகள். எப்போதும் அவர்கள் குறிவைக்கப்படலாம். ஆனால், இந்தியர்களுக்கு கிரிக்கெட் ஐந்தாவது வேதம். இப்போது வெற்றியே அவர்களின் தாரக மந்திரம்.

வென்றுவிட்டால், 20 வருடங்களின் பின்னர் அவர்கள் கைகளில் கிண்ணம். கபில்தேவுக்குப் பின்னர் கங்குலிதான் ஹீரோ. அதுவும் ஆஸ்திரேயர்களுக்கு எதிரான வெற்றி எனில் இந்தியர்களின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 16 தொடர் வெற்றிகளைப் பெற்ற ஆஸ்திரேலிய அணியின் வெற்றிப் பயணத்துக்கு சொந்த நாட்டில் முற்றுப்புள்ளி வைத்தவர்கள் இந்தியர்கள். இப்போது, ஒரு நாள் கிரிக்கெட்டில் 16ஆவது வெற்றிக்காக காத்திருக்கிறது ஆஸ்திரேலியா. இங்கேயும் இந்தியா அவர்களின் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடுமா? இன்று இரவுக்குள் தெரிந்து விடும் முடிவு.

ஆஸ்திரேலியக் குதிரைகள் எப்போதுமே அழகானவை. வாளிப்பான உடம்பு, கொள்ளை கொள்ளும் பிடரி மயிர். துடிப்பும் வேகமும் எப்போதும் அவற்றுடன் கூடப்பிறந்தவை. அவற்றைப் புரிந்துகொள்வதும் கட்டுப்படுத்துவதும், கட்டுக்குள் கொண்டு வருவதும் சுலபமான காரியமல்ல.

(3ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸ்திரேலிய அணியின் பாதுகாப்பு அதிகரிப்பு

சிட்னி,மார்ச்23

ஈராக் மீதான போரில் அமெரிக்காவுக்கு ஆஸ்திரேலியா ஆதரவு தெரிவித்துள்ளதையடுத்து அந்த நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலகக்கிண்ண இறுதியாட்டத்தைப் பார்ப்பதற்கு தென்னாபிரிக்க அதிபர் தாபே மெபகி வருவதனால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய அணி எங்கு சென்றாலும் உரிய பாதுகாப்பை வழங்குமாறு தென்னாபிரிக்க அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

அதே சமயம் ஏனைய அணிகளை நாங்கள் புறக்கணிக்கவில்லை என்றார் உலகக் கிண்ண பாதுகாப்பு இயக்க உறுப்பினரும் பொலிஸ் இயக்குநரு

(3ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவே கிண்ணம் வெல்லும்

## பாக். அணித் தலைவர் கூறுகிறார்

ஜோகான்னஸ்பேர்க்,மார்ச்23

இன்று நடைபெறவுள்ள கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்திய அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என பாகிஸ்தானின் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட ரஷீத் லத்தீப் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்து வெளியேறியதைத்

(3ஆம் பக்கம் பார்க்க)

# யாருக்கு கிண்ணம்

கிரிக்கெட் பிரியர்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த கிரிக்கெட் உலகக்கிண்ணப்போட்டி ஒருவாறு இன்று முன்னிரவுடன் முடிவுக்கு வருகின்றது. இந்நிலையில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் கிண்ணத்தைக் கைப்பற்றப்போவது யார்? என்பதுதான் அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள கேள்வி.

ஆஸ்திரேலியாவே கிண்ணத்தைக் கைப்பற்றும். இது ஆஸி அணி வசிறிகளின் எண்ணம். இல்லை இல்லை இந்தியாவே அக்கிண்ணத்தைத் தட்டிச்செல்லும் இது இந்திய அணி விசிறிகளின் புலம்பல். இன்று வர்ணபகவானின் தடை இருக்காது விட்டால் இவற்றுக்கு முன்னிரவு 11 மணிக்குள் தெளிவான முடிவு கிடைத்துவிடும்.

அதற்கிடையில் இந்த உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் நிலைபற்றி சற்று ஆராய்வோம்.



8 ஆவது கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டி கடந்த மாதம் 9ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் மொத்தம் 14 நாடுகள் கலந்துகொண்டன. கடந்த மார்ச் 4ஆம் திகதியுடன் லீக் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்தன. அதிலிருந்து இந்தியா, ஆஸ்திரேலியா, சிம்பாப்வே, இலங்கை, நியூஸிலாந்து, கென்யா ஆகிய 6 நாடுகள் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்திற்கு தகுதி பெற்றன. மார்ச் 15ஆம் திகதி சுப்பர் சிக்ஸும் முடிவடைந்தது. அதில் ஸிம்பாப்வே, நியூஸிலாந்து அணிகள் வெளியேற ஏனைய 4 அணிகள் அரையிறுதியில் மோதின. இதில் ஆஸ்திரேலியா இலங்கையும், இந்தியா கென்யாவையும் தோற்கடித்து இறுதியாட்டத்திற்கு வந்துள்ளன. 'ஏ' பிரிவில் இடம்பெற்ற ஆஸ்திரேலிய, இந்திய ஆகிய இரு அணிகளே இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன. அதிலும் முதற்சுற்று, 'சுப்பர் சிக்ஸ்' ஆகிய இரண்டிலும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றதும் இவ்விரு அணிகளே என்பது குறிப்பிடத்தக்கது. உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களால் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட இந்த உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் இன்று பகல் ஆட்டமாக ஜோகான்னஸ் பாக்கில் நடைபெறுகின்றது.



இதில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற கடும் போர் நடக்கும். இவ்வாட்டத்தில் மோதும் இரு அணிகளும் துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு ஆகியவற்றில் பலம் பொருந்தியதாக காணப்பட்டாலும் இந்திய அணியைவிட இம் மூன்று முனைகளிலும் ஆஸ்திரேலிய அணி ஒருபடி மேலே இருக்கிறது.

1983ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்தியா. அதன்பிறகு இறுதியாட்டத்திற்கே வந்ததில்லை அவ்வணி. கடந்த 20 ஆண்டுகளுக்குப்பின் 2ஆவது தடவையாக இறுதியாட்டத்திற்கு வந்துள்ளது. இதனால் கிண்ணத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற வேகம் இருக்கிறது இந்தியாவுக்கு.

ஆஸ்திரேலிய அணி 5ஆவது தடவையாக உலகக்கிண்ண இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளது. இதில் 1987, 1999ஆம்

(3ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் வேகப்பந்துவீச்சு எம்மை அச்சுறுத்துகின்றது

## பொன்டிங் தெரிவித்தார்

ஜோகான்னஸ்பேர்க்,மார்ச்23

இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு தமது அணிக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.

ஜோகான்னஸ்பாக்கில் நடைபெற்ற செய்தியாளருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா சிறந்த அணிகளில் ஒன்று. அவ்வணியின் துடுப்பாட்ட வரிசை நன்றாக உள்ளது. இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின்டென்டுல்கர் அணியின் முதுகெலும்பாக இருக்கிறார். அதேநேரம்

(3ஆம் பக்கம் பார்க்க)

# சச்சினுக்கு பந்துவீச ஆவலோடு உள்ளேன்

## பிரட்லீ தெரிவிப்பு

ஜோகான்னஸ்பேர்க்,மார்ச்23

கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாளர் சச்சின் டென்டுல்கருக்குப பந்துவீசத்தான் ஆர்வமாக உள்ளதாக ஆஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் பிரட்லீ தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது:-

உலகின் தலைசிறந்த துடுப்பாளராக விளங்கும் சச்சினுக்கு பந்து வீசுவது மிகவும் சிறப்பானது. அவர் ஒரு மிகச்சிறந்த வீரர். உயரம் குறைவாக இருந்தாலும் மன உறுதிமிக்கவர். அவருக்கு சரியான முறையில் பந்துவீசாவிட்டால் நாம் சிதறடிக்கப்படுவோம்.

அவருக்கு பந்துவீசுவது கடினம். ஏனென்றால் எவ்வாறு பந்து வீசினாலும் அதனை அடித்தாடும் வல்லமை பெற்றவர் சச்சின்.

கடந்த சில மாதங்களாக நான் சிறப்பாகப் பந்துவீசி வருகிறேன் என்றார் பிரட்லீ.

இன்றைய இறுதியாட்டத்தில் லீ - சச்சின் மோதல்தான் சுவாரசியமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை சிறப்பாகப் பந்துவீசி 20 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார் லீ. சச்சின் 669 ஓட்டங்களைக் குவித்து அதிக ஓட்டங்களைக் குவித்தவராக விளங்கி வருகின்றார்.

(ம- 5)

New
SHARP
ஜப்பானிய ஷார்ப்
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel
IBM
hp
Mercury
PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

# அரச போக்குவரத்துச் சேவையை தனியார் மயப்படுத்துவதே ஒரே வழி

## செய்தியாளர் மாநாட்டில் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்23

அரச போக்குவரத்துச் சேவையைத் தனியார் மயமாக்குவதைத் தவிர வேறுவழியில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யு.எல்.எம்.பாரூக்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகைதந்துள்ள அவர் நேற்று மாலை வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நிகழ்த்தினார்.

மேற்படி செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச போக்குவரத்துச் சேவையானது பல்வேறு வழிகளிலும் பெரும் நஷ்டத்தின் மத்தியிலேயே இடம்பெற்று வருகின்றது. எனவே, அரச போக்குவரத்துச் சேவையைத் தனியார் மயப்படுத்துவதன் மூலமே வளர்த்தெடுக்க முடியும். இதனைத் தவிர வேறு வழி எதுவும் தற்போதைக்கு கிடையாது.

ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்திலேயே போக்குவரத்துச் சேவை ஓரளவு திருப்தி தரும் வகையில் உள்ளது. ஏனைய மாவட்டங்களில் சபை ஊழியர்களின் சம்பளங்கள்கூட ஒழுங்கற்ற முறையிலேயே வழங்கப்படுகின்றன.

பஸ் பற்றாக்குறை உள்ளது என இங்கு தெரிவிக்கப்பட்டது. அடுத்த மாதமளவில் புதிதாக 20 பஸ்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சமாதான முயற்சிகள் ஏற்பட்ட பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபையை அபிவிருத்தி செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் வலியுறுத்தினார். வட பகுதி புனர்வாழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள ஆர்வம் எமக்கு புரிகின்றது. எனினும், அதற்கு நிதி நிலைமை இடம் கொடுப்பதாக இல்லை.

அரசிடம் மானியமாகப் பெறப்பட்டுள்ள நிதியைக் கொண்டே இலங்கை முழுவதிலும் உள்ள சுமார் 40 ஆயிரம் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு தொடர்ந்தும் வேலை வழங்கப்பட்டு வருகின்றது.

போக்குவரத்துச் சேவையினைப் புனர்நிர்மாணம் செய்வதோ, ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதோ மேலும் சிக்கல்களையே தோற்றுவிக்கும். எனவே, படிப்படியாக அரச நிதியினைப் பயன்படுத்தியே போக்குவரத்துச் சேவை வளர்த்தெடுக்க முடியும்.

அதேவேளை - போக்குவரத்துச் சேவையைத் தனியார் மயப்படுத்துவது குறித்து சில முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்றார் அவர்.

(எ-12)

ஈராக் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட

# இலங்கையருக்கு உதவிகள் வழங்க பிரதமர் ரணில் 5கோடி ஒதுக்கினார்

கொழும்பு,மார்ச்23

ஈராக் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 5 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியவர்களுக்கு உதவிகள் வழங்கவும் நிர்கதிநிலையில் வெளிநாடுகளில் உள்ளவர்களை மீளத் தாய்நாட்டுக்கு அழைப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவும் நிதி ஒதுக்குமாறு வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், தொழில அமைச்சர் சமரசிங்கவும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்தே உடனடி உதவியாக 5 கோடியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கியுள்ளார்.

(எ-3)

யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்ட

# உடனடி சமூக நலனோம்பு பணிகளுக்கு 58கோடி ரூபா வழங்கப் பிரதமர் உத்தரவு

கொழும்பு,மார்ச்23

யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்ட உடனடி சமூக நலனோம்பு மற்றும் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள 58கோடி ரூபாவை வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று முன்தினம் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே இந்தப் பணிப்புரையைப் பிரதமர் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடி சமூக நலனோம்பு மற்றும் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான திட்ட வரைவு ஒன்றை அமைச்சர் தி.மகேஸ்வரன் அக்கூட்டத்தில் முன்வைத்தார்.

அத்திட்டங்கள் ஆராயப்பட்ட பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான நிதியை வழங்கும்படி நிதி அமைச்சுச் செயலர் சரித்த ரத வத்த, பிரதமரின் ஆலோசகர் ஆர்பாஸ் கரலிங்கம், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோருக்கு பிரதமர் பணிப்புரை வழங்கியுள்ளார் என்று இந்து கலாசார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்திக்கு 3 கோடியும் மீன்பிடி அபிவிருத்திக்கு 7 கோடியும், கல்விப் பணிகளுக்கு 12 கோடியும், சுகாதாரப் பணிகளுக்கு 20 கோடியும், வீதி அபிவிருத்திக்கு 8 கோடியும், விளையாட்டு அபிவிருத்திக்கு ஒரு கோடியும் போக்குவரத்துச் சேவையை சீராக்க 7 கோடியும் ஒதுக்கும்படி மகேஸ்வரன் தனது திட்ட வரைவில் கேட்டுள்ளார்.

(ம-3)

# டிராக்டரில் இருந்து வீழ்ந்து சில்லில் சிக்கி இளைஞன் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச்23

டிராக்டரில் மணல் ஏற்றிக்கொண்டு வந்த இளைஞர் ஒருவர் அதில் இருந்து தவறி விழ்ந்து டிராக்டர் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்தார்.

வாதரவத்தை, வீரவாணிப் பகுதியில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது. புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி சுஜிந்தன் (வயது 19) என்பவரே மரணமானவராவார்.

சடலம் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்பு மாலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நேரில் சென்று பார்வையிட்டார். உழவு இயந்திரத்தின் சாரதி தற்பொழுது அச்சுவேலி பொலீஸில் சரணடைந்துள்ளார். உழவு இயந்திரமும் பொலீஸார் வசம் இருக்கிறது.

(ம-10-11)

## பிரதி நிதி அமைச்சர் அடுத்த வாரம் வருவார்

யாழ்ப்பாணம்,மார்ச்23

பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தனா உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுதத வாரமளவில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

மருதனார்மடத்திலும் சங்கானையிலும் அமையவிருக்கும் மத்திய பொதுச் சந்தைகளுக்கான இடங்களை பார்வையிடவிருக்கும் அவர் விவசாயிகளைச் சந்தித்து தற்போதைய நிலை குறித்து ஆராய்வார்.

(ம-3)

# நூலகத்துக்கு ஆயிரம் நூல்களை இந்தியத்தூதரகம் வழங்கும்!

## கொழும்பில் நாளை விசேட நிகழ்வு

கொழும்பு,மார்ச்23

யாழ்.நூலகத்துக்கு ஆயிரம் புத்தகங்களை இந்தியத் தூதரகம் நாளை அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றது. கொழும்பில் இடம்பெறவுள்ள விசேட நிகழ்வு ஒன்றில் வைத்து இந்தியத் தூதர் நிருபம் சென் இப்புத்தகங்களை தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியிடம் கையளிப்பார்.

விசேட வைபவமாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு அமைச்சர்கள், ராஜதந்திரிகள், அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள பல பொது அமைப்புகளிடம் இருந்தும் இந்தப் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

# யாருக்கு கிண்ணம்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1975, 1996ஆம் ஆண்டுகளில் கிண்ணத்தைக் கைநழுவவிட்டது.

கிரிக்கெட் உலகில் ஜாம்பவனாகவும் முடிசூடா மன்னர்களாகவும் விளங்கும் ஆஸ்திரேலிய அணியினரின் தற்போதைய பலத்தைப் பார்க்கும்போது இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றி தமது தொடர் வெற்றிச் சாதனையோடு 3ஆவது தடவையாக கிண்ணத்தை வெல்வார்கள் என்று கூறப்படுகிறது.

இந்திய அணியின் துடுப்பாளர்களான சச்சின் டெண்டுல்கர், கங்குலி மிகவும் சிறப்பான நிலையில் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். இவர்களைவிட ஆரம்ப வீரரான ஷேவாக்கும் ஓரளவு சிறப்பாக விளையாடி வருகின்றார். அதற்கு அடுத்த படியாக திராவிட், யுவராஜ்சிங், கைவ போன்றவர்களும் நிதானமாக துடுப்பெடுத்தாடி அணியைச் சரிவிலிருந்து மீட்டு வருகின்றனர்.

இன்றைய இறுதியாட்டத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாளர்களான சச்சின், ஷேவாக், கங்குலி ஆகியோரே குறைந்தது முதல் 10 ஓவர்களுக்கும் ஆஸி அணி வேகப் பந்து வீச்சாளர்கள் தமது துல்லியமான பந்துவீச்சின் மூலம் பெவிலியன் திருப்புவதில் கவனம் செலுத்துவர். இல்லையெனில் ஆஸி அணிக்கு அச்சுறுத்தல்தான்.

இந்த உலகக்கிண்ணத்தில் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களும் புது உத்வேகம் பெற்றவர்கள் போல் பந்து வீசி, எதிரணியைத் திணறடித்து வருகின்றனர்.

அணியின் அனுபவம் வாய்ந்த ஸ்ரீநாத், ஷகீர்கான் மற்றும் நெஹ்ரா எதிரணியின் விக்கெட்டுக்களை விரைவாகச் சரிக்கக் கூடிய வகையில் பந்து வீசி வருகின்றனர்.

இதேபோல உலகின் சிறந்த துடுப்பாளர்களை கொண்ட அணியாக ஆஸ்திரேலியா விளங்குகின்றது. அதிரடி ஆட்டக்காரர் கில்கிறிஸ்ட், மைக்கல் பெவன், சைமன்ஸ் மிகவும் சிறப்பாக ஆடி வருகின்றனர். அவர்களுக்கு அடுத்தாற்போல் ஹேடன், பொன்ரிங், லீமன், மார்டின் ஆகியோரும் அணியில் உள்ளமை அணிக்கு மேலும் ஒரு பலம். இவை எல்லாவற்றையும் விட அன்ரு பிக்சல், ஹோக், ஹார்வி ஆகியோர் பந்துவீச்சாளர்களாக இருக்கின்றபோதும் முக்கிய கட்டத்தில் தமது துடுப்பாட்டத் திறமையின் மூலம் எதிரணியை அச்சுறுத்துகின்றனர். இந்த வகையில் ஆஸ்திரேலியாவின் ஆரம்பத்துடுப்பாளர் முதல் 9 ஆவது துடுப்பாளர் வரை நல்ல நிலையில் உள்ளனர் என்பதை எவரும் மறுக்க இயலாது.

துடுப்பாட்டம் இவ்வளவு உச்சத் திறன் என்றால் பந்து வீச்சு அதிலும் மேல். இந்தியாவுடன் ஒப்பிடும்போது அதனைவிட சிறந்த பந்து வீச்சு வரிசையை கொண்டது ஆஸி அணி. பல களங்கண்ட அனுபவம் வாய்ந்த மெகராத், அதிவேக பந்துவீச்சாளர் பிரட்லி மற்றும் பிக்சல் ஆகியோர் அணியின் வெற்றிக்கு கட்டியங் கூறுபவர்கள். இந்தத் தொடரில் பிரட்லீ 20 விக்கெட்டுக்களையும் மெக்ராத் மற்றும் பிக்சல் ஆகியோர் முறையே 18, 15 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

இவை இரண்டையும் விட உலகக் கிண்ணத்தில் பங்குபற்றும் ஆஸி அணியின் அநேகமான வீரர்கள் உடம்பு பருத்தவர்களாக விளங்குகின்ற போதும் அவர்களின் களத்தடுப்பு பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் ஆஸ்திரேலியாவின் முப்முனைத் தாக்குதல் (துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்துவீச்சு) பற்றி பெருமளவு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கு நிகர் அவர்களே என்றால் அது மிகையாகாது.

இதே நேரம் ஆஸ்திரேலியாவின் முன்னணித் துடுப்பாளர் டேமியன் மார்டின் பூரண உடல்தகுதியுடன் இல்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் அவர் பங்குபற்றுவது சந்தேகம்.

ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சை ஆரம்பத் துடுப்பாளர்களான சச்சினும் ஷேவாக்கும் அதிரடியாக அடித்து விளையாடினால் இந்தியாவுக்கு அது சாதகமாக அமையும். அதே வேளை ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் போன்ற அதிரடி ஆட்டக்காரர்களை கட்டுப்படுத்துவது இந்திய வேகப்பந்து வீச்சாளர்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது.

ஆஸ்திரேலியா தோல்விகள் என்ற சொல்லுக்கே இடம்கொடாமல் தொடர் வெற்றி பெற்று வீறுநடை போடுகின்றது. அந்த வீறுநடைக்கு இந்திய அணி தடைக்கல்லாக அமைந்து முற்றுப்புள்ளி வைக்குமோ என்பது இன்று தெரிந்துவிடும்.

எது எவ்வாறு இருப்பினும் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்ப்பதுபோல இன்றைய இறுதியாட்டம் விறுவிறுப்பாக இருக்குமா? அல்லது கடந்த (1999) உலகக்கிண்ணத் தொடரில் ஆஸதிரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதியாட்டம்போல் உப்புச்சப்பில்லாமல் இருக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

-வசந்தன்.

## இந்தியாவின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பந்து வீச்சும் நன்றாக இருக்கிறது. கடந்த ஓர் ஆண்டாக பந்து வீச்சில் முன்னேற்றம் இருக்கின்றது. வீரர்களின் வேகப்பந்துவீச்சு எங்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளது - என்றார்.

இதேவேளை ஆஸ்திரேலிய அணியின் வெற்றியைத் தடுத்துநிறுத்த சச்சின்டெண்டுல்கர் ஒருவரால் மட்டுமே முடியும். அவருக்கு பந்து வீசுவது பெரும் சவால்தான். அவர் உலகின் தலைசிறந்த துடுப்பாளர் ஆவார் என ஆஸியின் சுழற்பந்து வீச்சாளரும் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனையில் சிக்கி அணியில் இருந்து தூக்கப்பட்டவருமான ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

(ம-5)

## ஆஸ்திரேலிய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான 'பென் வான் டிவென்டர்.

எமது உளவுப் பிரிவினர் தொடர்ந்து பொலீஸாருக்குத் தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆஸ்திரேலிய அணி தமது பாதுகாப்பு நடவடிக்கை பற்றி இதுவரை எவ்விதமான புகார்களையும் தெரிவிக்கவில்லை எனவும் டிவென்டர் தெரிவித்தார்.

உலகக்கிண்ண ஆரம்ப நாளிலிருந்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரையும் எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இன்றியே ஆட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. அதேபோலவே இன்றைய ஆட்டமும் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம். நாங்கள் அதைச் சாதிப்போம் - என்றார் உலகக் கிண்ண நிர்வாக இயக்குநர் அலி பாக்கர் (ம-5)

# இந்தியாவே....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வக்கார் யூனிஸ்க்குப் பதிலாக புதிய அணித் தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் லத்தீ.ப்.

உலகக் கிண்ணத்தை வெல்லப் போவது யார் என்பது குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் அதிகாரபூர்வ இணையத் தளத்திற்கு பேட்டியளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தில் ஆஸ்திரேலியாவுடனான ஆரம்ப ஆட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக படுதோல்வி அடைந்து பல்வேறு எதிர்ப்புக்களைச் சம்பாதித்தது இந்திய அணி. ஆனால் அதன் பின்னர் அந்த அணி வீரர்களிடம் ஏற்பட்ட எழுச்சி பாராட்டத்தக்கது.

இத்தொடரில் அபாரமாக விளையாடி தொடர் வெற்றிகளைப் பெற்று வரும் ஆஸ்திரேலியாவே கிண்ணத்தை தட்டிச் செல்லும் என்ற பொதுவான கருத்து நிலவுகின்றது.

ஆனால் கடந்த ஐந்து வாரங்களுக்கு முன்பாக ஆஸி அணியிடம் தோல்வி பெற்றதன்பின் இந்திய வீரர்கள் விளையாடிவரும் பாங்கை யாரும் மறக்க முடியாது. இத்தகைய மாற்றத்தை அளவிட முடியாதுள்ளது. ஆதலால்தான் இந்தியாவே கிண்ணத்தை வெல்லும் என நினைக்கின்றேன். ஆரம்ப ஆட்டங்களில் திணறிய போதும், பின்னர் அதில் இருந்து மீண்டு அதிரடியாக விளையாடி வரும் இந்திய அணியைப் போன்ற ஆட்டத்தை எல்லா அணியாலும் வெளிப்படுத்த முடியாது என்றார் லத்தீ.ப.

(ம-5)

# உச்சக்கட்டம்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியினால் வீறுகொண்டுள்ள ஆஸ்திரேலிய அணியின் நிலையும் அதுதான் இந்தியாவுக்கு ஒன்றும் அவர்கள் சுலபமாக அடங்கிப் போகப் போவதில்லை. ஆரம்பத்தில் அடங்கிப் போனாலும் இடையில் திமிறி வீறுகொண்டெழுவது ஆஸி, அணிக்கு கைவந்தது. இந்தத் தொடரில் பல முறை அதை நிரூபித்திருக்கிறார்கள். அவர்களின் துடுப்பாளர் வரிசை அத்தனை திறம். கூடவே அனுபவமும் நிறைய இருக்கிறது. எதற்கும் சளைத்துவிடாத போராட்டக் குணம் இருக்கிறது.

இந்திய விளையாட்டு ஹீரோக்களிடம் இவையெல்லாம் இருக்கின்றனவோ? இளமை நிறைய இருக்கிறது அணியிடம். அது மட்டும் வென்று விடுவதற்குப் போதுமா? அனுபவம் வாய்ந்தவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட சாதனைகளில் வீரர்கள்; இப்போது அணியின் கூட்டுமுயற்சி அவர்களுக்கும் கொஞ்சம் கைவந்திருக்கிறது. அதற்குக் கிடைத்த பரிசுதான் அவர்கள் பெறும் தொடர் வெற்றிகள்.

உலகின் மிகச் சிறந்த வேகப் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறந்த துடுப்பாளர்கள் மோதும் ஆட்டம் இது. மிக விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால், கடந்த சில உலகக் கிண்ண இறுதி ஆட்டங்கள் விறுவிறுப்பாய் அமைந்ததில்லை. 1996இல் இலங்கையின் வெற்றியும் 1999இல் ஆஸ்திரேலியாவின் வெற்றியும் முன்கூட்டியே தெரிந்தவை. அதுபோலில்லாமல் விறுவிறுப்பான - கதிரை நுனியில் அமர வைக்கும் - ஆட்டமே ரசிகர்களுக்குத் தேவை.

ஆஸ்திரேலியர்கள் வென்று விட்டால் தொடர்ந்து இரு தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற மேற்கிந்தியாவின் சாதனையைச் சமப்படுத்துவார்கள். மூன்று தடவைகள் கிண்ணத்தை வென்ற ஒரே அணி என்ற புதிய சாதனையை ஏற்படுத்துவார்கள். இந்தியர்கள் வென்றுவிட்டால், இரு தடவைகள் கிண்ணத்தை வென்ற மேற்கிந்தியா, ஆஸ்திரேலியா அணிகளின் சாதனையைச் சமப்படுத்துவார்கள். எதுவோ ஒன்று நடக்கும். அதுவரை பொறுத்திருப்பதே செய்யக்கூடிய ஒன்று.

- கனிமொழி.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1948 - 11 - 29



விண்ணில் 2001 - 04 - 13

## அமரர் செல்லன் சண்முகரத்தினம்

(சின்னக்கிளி)

திதி: 23.03.2003 (ஷஷ்டி)

எங்கள் குலம் வாழ
ஒளி தந்த குலவிளக்கே!
சொல்லாமல் கொள்ளாமல் எமைவிட்டு
சடுதியிலே போனதெங்கே....?
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

பிரிவினால் தவிக்கும்:
குடும்பத்தினர்.

(C/37028)

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 10 - 1935



உதிர்வு 01 - 04 - 1994

## அமரர் மு.இராசரத்தினம்

(முன்னாள் செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி)

திதி: 23.03.2003

ஐயா, எம்மை உருவாக்கி உயர வைத்து
நயவுரைகள் கூறும் நற் தந்தையாகி
உற்றார்க்கு உதவி செய்யும் உறவினனாகி
ஊர் உலகம் போற்றும் உத்தமனாகி
எங்கே நீர் சென்றீர் ஐயா?
மாறுமா இத் துயரம்? மறக்குமா உம் நினைவு?
நின் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
இ.நந்தினி
"இராஜேந்திரன் அன்பகம்",
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(15692)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு 02 - 06 - 1961



உதிர்வு 23 - 03 - 1999

## அமரர் இரத்தினம் புனிதராசா

(செல்வராசா)

(சாவகச்சேரி சன்றைஸ் ரேடர்ஸ்)

திதி: 23.03.2003

*அன்புள்ளம் கொண்டவரே
பாசத்தின் பிறப்பிடமே
கருணையின் இருப்பிடமே - அப்பா!
உன்னை காலன் வாழவேண்டிய வயதிலே
கவர்ந்து சென்று விட்டானே அப்பா!
எம்மை விட்டுப் பிரிந்து நாலாண்டுகள்
கடந்திட்ட போதிலும் உங்கள் நினைவுடன் வாழும்...*

மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதரர்கள்,
மாமி, மச்சான்மார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சோலை கிழக்கு,
மீசாலை.

(15784)

## விடுமுறைக்கு முன் ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை முடிவுகள்

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(சா/த) பரீட்சை முடிவுகள் முதலாம் தவணை விடுமுறைக்கு முன்னர் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சைக்கு பாடசாலைகளிலிருந்து 3லட்சத்து 83 ஆயிரத்து 15 பரீட்சார்த்திகளும் 1லட்சத்து 30 ஆயிரத்து 851 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

## வாகனம் தேவை

தனியார் பாவனையிலுள்ள morris 1000 கார் தேவை.
அபி,30,வேதாரணியர் வளவு,
உடுவில்.
(A.G.A.அலுவலகம்முன்)
T.P.: 070-212671

காலை 7.30 மணிக்கு முன்னும் இரவு 10.00 மணிக்கு பின்னும் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தலாம் அல்லது பகலில் நேரில் தொடர்புகொள்ளலாம்.

(15817)

## French மொழி வகுப்பு

யாழ். நகரில்

தமிழ் மூல விளக்கத்துடன் எழுத, பேச 3 மாதப்பயிற்சி நடைபெறும் நாள்கள், நேரம்
பிரதி செவ்வாய்
3.00மணியிலிருந்து
6.30மணிவரை.
பிரதி புதன்
காலை 9.00மணியிலிருந்து
6.30 மணிவரை.
பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வகுப்பு நடைபெறுகின்றது.
புதிய பிரிவு ஆரம்பம்:- 25.03.2003
மாலை 3.00 மணி.

ஆசிரியர்:
இந்திரகுமார் CAP

New College of Higher Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.: 01-505642

(15750)

## பிரபல தென்னிந்திய வாஸ்து (மனைப் பொருத்தம்) வல்லுநர் யாழ்.விஜயம்

"நாள் செய்வது போல் நல்லோர் செய்யார்
மனை செய்வது போல் மக்களும் செய்யார்."

☆ *நீங்கள் குடியிருக்கும் வீட்டில் பிரச்சினையா?*
☆ *தொழில் முன்னேற்றம் இல்லையா?*
☆ *தீராத வியாதியா?* ☆ *குழந்தை இல்லையா?*
☆ *திருமணத் தடையா?*

இவைகள் அனைத்தும் நீங்கள் குடியிருக்கும் இடத்தின் வாஸ்து குற்றங்களினால் ஏற்படக்கூடியவை.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள நீங்கள் அணுக வேண்டிய இடம்:

வாஸ்து வல்லுநர் S.S. யோகராஜ்
C/o சுவிஸ்ஸோ நகைத்தொழிலகம்,
44/1, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-37049)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 - 11 - 1927



விண்ணில் 23 - 03 - 1995

## அமரர் கதிர்காமு சின்னத்துரை

(முன்னாள் கீரிமலைக் கேணிப் பாதுகாவலர்)

திதி: சஷ்டி - 23-03-2003

எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
நீங்கள் என்றும் எம் நினைவில்...

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(15782)

# நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

## திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

திருமணத்தின் போது பெண்களுக்கு சீதனம் வழங்கும் முறையானது, யாழ்ப்பாண சமூகத்தில் ஆழமாக வேரோடிய, நிறுவனமயப்பட்ட ஒரு வழக்காகும். யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய சொத்துடைமைச் சட்டமாகிய தேச வழமைச் சட்டக் கோவையில் சீதன முறைமை ஒரு சமூக ஒழுங்குமுறையாகக் கொள்ளப்படுகிறது. மிகவும் சுவாரஸ்யமான இந்தச் சொத்துடைமை சட்டத்தில், தாய்வழியாகவும் தந்தைவழியாகவும் பெறப்படும் சொத்துக்களைப் பேணுவது பற்றிய விதிமுறைகள் அடங்கியுள்ளன. தாய்வழிச் சொத்துடைமையின் மூலம் முந்நூறு ஆண்டுகால வரலாற்றையுடைய தேச வழமைச் சட்டத்திற்கும் அப்பாலானது. யாழ்ப்பாணத்து சீதன வழக்கு முறையின் வரலாற்று வேரும் ஆழமானது.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்
இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும்,
பிரபல புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

பக்கங்கள்: 479 விலை 500/-

உதயன்

# மனிதப் பேரவலம் தவிர்க்கப்படவேண்டும்

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்திருக்கும் போரின் தாக்கம் உலகெங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. குடாநாடு உட்பட இலங்கையிலும் அதன் உடனடித் தாக்கம் உணரப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களைப் பெற்றுக் கொளவதற்கு பொதுமக்கள் படும்பாடும், 'பதுக்கல்' போன்ற மோசடிகளும் உடனடிப் பாதிப்புக்கள். இதேபோன்று, உலகின் பலநாடுகளில் எல்லா நகரங்களிலும் போரின் தாக்கம் உணரப்பட்டு வருகிறது. இவை போரின் மறைமுகமான தாக்கங்கள். இந்த உடனடித் தாக்கங்களை விட பொருளாதார ரீதியாக நீண்டகாலத்தில் ஏற்படப் போகின்ற பாதக விளைவுகளும் இருக்கின்றன.

உலகெங்கும் பங்குச் சந்தை வர்த்தகம் வீழ்ச்சி கண்டிருக்கிறது. டொலரின் பெறுமதி சரிந்துள்ளது. எண்ணெய் விலை அதிகரித்திருக்கிறது. எரிபொருள் விலை உயர்வினால் தொழில் முயற்சிகள் முடங்கிப்போய் வேலைவாய்ப்புக்களும் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகப்போகின்றது.

போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஈராக்கில் வசிக்கும் பல கோடி மக்கள்தான்.

அமெரிக்காவும் அதன் கூட்டாளியான பிரிட்டனும் தத்தமது படை வலுவை ஈராக் மண்ணில் பரீட்சித்துக்கொண்டிருக்கின்றன. நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயனாகக் கிடைத்த அழிவு கருவிகளை வளைகுடாப்போரில் அமெரிக்கா பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

பேரழிவை ஏற்படுத்தும் குண்டுகள், ஏவுகணைகள், 30 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் பக்தாத் நகரம் மீது வீழ்ந்துகொண்டிருக்கின்றன. பக்தாத் நகரம் எரிந்துகொண்டிருக்கிறது என்று செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

போரினால் முதலில் செத்துமடிவது உண்மையே. அந்த வகையில் அப்பாவி ஈராக்கிய மக்கள் நூற்றுக்கணக்கில் பலியாகியிருக்கின்றனர் என்ற உண்மை வெளியுலகுக்குத் தெரியாதபடி மறைக்கப்பட்டிருக்கிறது.

போரில் இருந்து தப்பி வெளியேறத் துடிக்கும் ஈராக்கியர்கள் போக்கிடம் தெரியாது அல்லாடிக் கொண்டிருக்கின்றனர். அண்டை நாடுகள் பலவும் ஈராக்குடனான எல்லைகளை இறுக்கி மூடிவிட்டன. தலைநகரிலும் நகருக்கு வெளியே முக்கிய நகரங்களிலும் இருந்து வெளியேறிய மக்கள் பாலைவனப் பிரதேசங்களில் குவிந்துகொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் துருப்புக்கள் அடுத்த சில தினங்களில் தலைநகரை நெருங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது போரின் கொடூரம் மேலும் தீவிரமடையப் போவது நிச்சயம்.

உணவு, தண்ணீர், மின்சாரம் வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் பக்தாத் மக்கள் உள்ளனர். லட்சக்கணக்கான குழந்தைகள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளன என்று தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

மனிதாபிமான உதவிகளை வழங்குவது பற்றி பல நாடுகள் சிந்தித்து வருகின்றன. ஆனால் மிகத் தாமதமாக அளிக்கப்படும் உதவிகள் பாதிப்புக்களைத் தடுக்க உதவமாட்டா. எனவே பக்தாத்தில் ஏற்படக்கூடிய மனிதப் பேரழிவைத் தவிர்க்க போரில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்புக்களும் முன்வர வேண்டும்.

ஈராக் மீதான போரைத் தவிர்ப்பதில் தனது கையாலாகாத் தனத்தைக் காட்டிவிட்ட ஐக்கிய நாடுகள் சபை, உடனடியாக சர்வதேச சமூகத்தைத் திரட்டி பக்தாத் மக்களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளையாவது துரிதப்படுத்தவேண்டும்.

ஈராக் மீது வீசப்படும் ஒவ்வொரு குண்டுகளும் மிக நேர்த்தியாக - நேர்மையாக - இலக்கை மட்டும் தாக்குவதாகவே - வீசப்படுகின்றன என்கிறார் அதிபர் புஷ். எனினும் எந்தக் குண்டோ, ரவையோ மனித உயிர்களை அப்பாவி, தீவிரவாதி என்று இனங்கண்டு அழிப்பதில்லை. போரின் விளைவு அழிவுதான். அது ஆக்கத்திற்கு ஒருபோதும் உதவ முடியாது.

கொடூர போரில் இருந்து ஈராக்கிய மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் உரத்துக் குரல் எழுப்பவேண்டும். பக்தாத்தில் ஏற்படக்கூடிய மனிதப் பேரவலத்தைத் தடுக்க போரை விரும்பாத நாடுகள் விரைந்து செயலில் இறங்கவேண்டும்.

# கோட்டே மாநகர சபை நிர்வாகம் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது

## மேல் மாகாணசபை முதலமைச்சர் திடீர் நடவடிக்கை

கொழும்பு,மார்ச்23

ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் நிர்வாகம் கடந்த வியாழன் நள்ளிரவுமுதல் மாநகர ஆணையாளரின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மேல்மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயின் உத்தரவுப்படியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் சட்டத்தின் கீழ் முதலமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பிரயோகித்தே முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே, இதற்கான உத்தரவைப் பிரயோகித்திருக்கிறார். ஐ.தே.க. நிர்வாகத்திலிருந்தே கோட்டே மாநகர சபையில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் குறித்து மேல் விசாரணை நடத்துவதற்காகவே மாநகர சபையின் நிர்வாகம் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று முதலமைச்சர் குரே கூறியிருக்கிறார். (ஐ)

## மாதர் மான்மியம்

### ஆயா அணைத்து வாழ்கிறார்

அன்றி 'ரற்றா' என்று அந்த
அழகு குழந்தை செப்பவே
அன்றி 'பாய்' 'பாய்' என்று சொல்லி
அருமைச் சாளி ஏறினாள்
மம்மி டடி குழந்தையை விட்டு
மட்றாஸ் சென்று வாழ்கிறார்
மம்மி இன்றி இந்த மகவு
மனது நொந்து வாழுது
அம்மா அப்பா அருகிருந்து
அணைக்க வேண்டிய குழந்தையை
அம்மா அப்பா இல்லாதிருக்க
ஆயா அணைத்து வாழ்கிறாள்.

- விகடகவி.

# புலிகளின் சார்பு அறிக்கைகளை அமைச்சர் பீரிஸ் வெளியிடுகிறார்

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு

இப்பொழுதெல்லாம் விடுதலைப் புலிகள் சார்பாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்தான் அறிக்கைகளை விடுக்கிறார் என்று பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஜனாதிபதியிடம் அங்கீகாரம் பெறும் அறிக்கை ஒன்று விடப்படுமானால் பொ.ஐ. முன்னணி அது குறித்து பரிசீலனை செய்யும்.

இதுவரை எந்தவொரு தரப்பினரும் இந்த வேண்டுகோளை சமர்ப்பிக்கவில்லை.

அடுத்ததாக ஆட்சிக்குவரும் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு தாங்கள் தயாரில்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

அதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- என்றார் அமுனுகம. (ஐ-4)

## 'சினியாத்ரா' திரைப்பட விழாவில்

# சிங்கள இயக்குநர்களின் எட்டு திரைப்படங்கள்!

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு இலங்கை ஆசிய திரைப்பட மையம் ஆகியவற்றுடன் இணைந்து திரிகோண கலை மையத்தின் ஏற்பாட்டில் நடத்தும் 'சினியாத்ரா' இலங்கைத் திரைப்பட விழா எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை முதல் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

திரைப்படவிழாவின் தொடக்க நாளான 26ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் நெறியாள்கையில் உருவான 'நிதானய'(புதையல்) எனகின்ற சிங்கள மொழிப் படம் காண்பிக்கப்படும்.

27ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு அசோக ஹந்தகமவின் நெறியாள்கையில் உருவான 'சந்த கின்னரி'(நிலவுப் பெண்) -

28ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பிரசன்ன விதானகேயின் நெறியாள்கையில் உருவான 'புரசந்த கலுவற'(ஓர் பூரணையில் மரணம்) -

29ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வசந்த ஒபயசேகரவின் 'தீத்த யாத்ரா'(தீர்த்த யாத்திரை), பிற்பகல் 2 மணிக்கு தர்மசேன பத்திராஜாவின் 'மத்துயம் தவச'(எதிர் காலத்தில் ஏதோ ஒருநாள்), பிற்பகல் 4.30 மணிக்கு தர்மசேன பத்திராஜாவின் 'பொன்மணி'(தமிழ்) -

30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தர்மசிறி பண்டாரநாயக்கவின் 'பவதுக்க'(முதல் பாகம்), பிற்பகல் 2 மணிக்கு அதே நெறியாளரின் 'பவகர்ம'(இரண்டாம் பாகம்) ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப்படும்.

இறுதிநாள் பிற்பகல் 4.30 மணிக்கு திரைப்பட இயக்குநர்கள் வசந்த ஒபயசேகர, தர்மசேன பத்திராஜா, பிரசன்ன விதானகே, அசோக ஹந்தகம, தர்மசிறி பண்டாரநாயக்க ஆகியோர் பங்குகொள்ளும் கருத்தரங்கும் இடம்பெறும். (ஐ-6)

# கிணறுகளில் மீண்டும் ம.எண்ணெய்க் கசிவு

அரியாலை கலைமகள் வீதியில் உள்ள தனியார் மண்ணெண்ணெய் விற்பனை நிலைய நிலத்தடி எண்ணெய் கொள்கலனில் ஏற்பட்ட கசிவினால் அருகிலுள்ள கிணறுகளின் நீர் மாசடைந்து எண்ணெய் கலந்து காணப்படுவதாக மீண்டும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்திற்கும் யாழ்.மாநகர சபைக்கும் முறைப்பாடுகள் தெரிவித்ததை அடுத்து யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் குறிப்பிட்ட கிணறுகளின் நீரை பரிசோதனை செய்து எண்ணெய் கலந்துள்ளதை உறுதிப்படுத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி எண்ணெய் தாங்கிமூலம் எண்ணெய் விநியோகத்தை உடன் நிறுத்துமாறும் தாங்கி திருத்தம் செய்யப்படும்வரை எவ்வித நடவடிக்கைகளையும் தொடர வேண்டாமெனவும் திருத்தம் செய்யப்பட்டது உறுதிப்படுத்தப் படும்வரை இந்த எண்ணெய்த் தாங்கியை பாவிக்கத் திட்டமிடல் பகுதியால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-30)

### நாளை

பங்குனி :10
திங்கட்கிழமை
(24.03.2003)
திதி : ஸப்தமி
பின் இரவு 1.34வரை.
நட்சத்திரம்: கேட்டை
மாலை 6.49வரை.
சுபநேரம் : 12.16 - 1.46
ராகுகாலம்: 7.46 - 9.16
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

அறம் பிழைத்தோர்க்கு நீதி கூற்றுவனாகும்.

# பாடசாலை சீருடைத் துணி விநியோகிப்பதில் தாமதம்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைப் பரப்பில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையிலான மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகளில் காற்சட்டைக்கான துணி இதுவரை வந்து சேராததால் சீருடைத்துணி விநியோகத்தினை உரிய காலத்தில் மேற்கொள்ள முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது.

'சதோச' நிறுவனத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைத் துணிகளில் ஒரு தொகுதி இன்னும் கிடைக்கவில்லை எனவும், துணிகள் கிடைத்ததும் சங்கத்தின் கிளைக் கடைகளில் வைத்து வழங்கப்படுமெனவும் சங்கப் பொது முகாமையாளர் சிதேவகுமார் தெரிவித்தார்.

ஏனைய மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் சங்கத் தலைமை அலுவலகத்தில் முத்திரையைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (ஐ-117)


'குடி' உன் குடியை மட்டுமல்ல - உன் குழந்தையின் குடியையுமல்லவா அழிக்கிறது!



குடியை நாடிக்கொண்டே டே டே. இருக்கும் குடும்பத் தலைவர் (?) களே! நீங்கள் குடிப்பதால் பெறுவதாகக் கருதப்படும் சந்தோசம் (?) தற்காலிகமானது! நீடிக்கமுடியாதது! ஆனால், அதனால் உங்கள் பிள்ளைகளுக்கும் குடும்பத்துக்கும் ஏற்படப்போகின்ற மனக் கஷ்டம், மகிழ்ச்சி இன்மை, பொருளாதார நஷ்டம், மான இழப்பு, தவறான முன்மாதிரி, இருண்ட எதிர்காலம் ஏன் உங்களின் மேல் அவர்களுக்கு ஏற்படப்போகின்ற வெறுப்பு எல்லாமே... நிலையானவை நீடிக்கக் கூடியவை - நீங்கள் "குடியை விடமாட்டேன்" என அடம்பிடித்துக்கொண்டே இருப்பீர்களானால்!!

குறிப்பு :- அநேக சிறுவர்களின் துஷ்பிரயோகங்களுக்கு அடிப்படைக் காரணமாக பெரியோர்களின் மது பாவனை காணப்படுவதை அண்மைக்கால புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். ; T.P.: 021-222 2261 Ext.274

விளம்பர அனுசரணை: SC (UK)

(சி-37061)

# அழகிய கூந்தலின் ரகசியம்




பக்கவிளைவு அற்றது

## பயோட்டினெக்ஸ் - E

பயோட்டினுடன் விட்டமின் - Eயும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

### எது உங்கள் பிரச்சினை ?

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா



இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

**BIOTINEX - E**

பாவனை முறை:
தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்

இயற்கையான பயோட்டினெக்ஸ்-E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

**யாழ் முகவர்**

ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☏ 021 2223191

**வன்னி முகவர்**

அகிலன்ஸ் பார்மசி, (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By : **Arkem Colombo**
Tel : 470290, 075-344436 Email : arkem@sltnet.lk.

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.


## மலிவு விலையில் காணி விற்பனைக்கு

கன்னாகம் சந்தி, மல்லாகம் சந்திகளுக்கு இடை நடுவில் கிழக்கு பக்கமாக 1/4 மையில் தூரத்தில் ஏழாலை தெற்கில் 13 1/2 பரப்பு "டானா"பட்ட காணி ஆதிகாலந்தொட்டு கொங்கிறீற் தூண்களால் சுற்றி அடைக்கப்பட்டு தற்சமயம் இலந்தை கொப்புக்களால் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. தென்மேற்குப் பக்கமாக ஒழுங்கை முகப்பாக நாலு பரப்புக் காணி அளவில் வாங்கி இக்காணியை சதுரக்காணி ஆக்க் சந்தர்ப்பம் உண்டு. ஒழுங்கை முகப்பாக 31 பனைகள் உண்டு. தென்மேற்குப்பக்கமாக வீடு கட்டவும், வடக்கிலும் கிழக்கிலும் கமம், தென்னைகள், வாழைத்தோட்டம் செய்ய மிக உகந்த காணியாக இருக்கிறது.

வடக்குப்பக்கமாக இருக்கும் சிறு குளத்துக்கும் இக்காணிக்கும் இடையில் மண்வரம்பு இருக்கிறது. இக் குளத்தில் மாரி காலத்தில் மாத்திரம் நீர் இருக்கும். தெற்குப் பக்கத்தில் கல்வீடுகள் இருக்கின்றன. வடக்குப் பக்கமாக 'இலங்கை போக்குவரத்துச் சேவை' உள்ளது. ஐந்து நிமிட நடை. வடக்குப் பக்கமாக வாழைத் தோட்டம், சைக்கிளில் சுன்னாகம் சந்தை, மயிலணிப் பள்ளிக்கூடம், மல்லாகம் வித்தியாசாலை ஆகிய இடங்களுக்கு போகலாம். சைவ சன்மார்க்க வித்தியாசாலையும் அண்மையில் உண்டு. ஆழமில்லாத கிணறு வெட்டி தண்ணீர் எடுக்கலாம். பரப்பு மிகக் குறைந்த விலை ரூபா 35,000/-.

மேற்பார்வையாளர்,
ஆ.சண்முகராசா,
தேவாலயம் முன்பாக, சூறாவத்தை, சுன்னாகம்.
(15822)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 - 09 - 1926



மறைவு
03 - 04 - 2002

### அமரர் மாணிக்கம் சுப்பிரமணியம்

*(பரிசோதகர், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை)*

திதி: கிருஷ்ண சஷ்டி (23.03.2003)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஐயா! என்று அழைக்க உறவொன்று வருமோ
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும் ஐயா - உங்கள் நினைவு
எம் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும்!

*உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.*

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*ஐயனார் கோவிலடி,*
*சுன்னாகம்.*
(15812)

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினால் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ள லயன்ஸ் கழகம் - மல்லாகம் / தெல்லிப்பழை

We Serve



திருமதி பாலாம்பிகை சிறிபாஸ்கரன்
*புதிய கழகத் தலைவர் மல்லாகம் / தெல்லிப்பழை*

நொய்ந்த மனத்தோனை மகிழ்விப்பதற்கும் ஆதரவற்றோருக்கு இன்னருள் அளிப்பதற்கும் ஒரு சோகக் கண்ணீரைத் துடைப்பதற்கும் பயந்த மனத்தினை சாந்தி செய்வதற்குமாகவுமாக வலிகாமம் வடக்கில் நீண்ட காலமாக இருந்துவந்த குறையை நிவர்த்திசெய்து இப்பகுதி வாழ் நலிவுற்ற மக்களுக்கு தன்னால் இயன்ற மனிதாபிமான பணியை ஆற்ற மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினால் எடுத்துள்ள பெரும் முயற்சி இன்று கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ள "மல்லாகம் / தெல்லிப்பழை - லயன்ஸ் கழகம்" பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அரசசார்பற்ற ஸ்தாபனங்களில் "சர்வதேச லயன்ஸ் கழகங்கள்" என்று அழைக்கப்படும் எங்கள் ஸ்தாபனம் உலகிலேயே பூகோள ரீதியாக 190 நாடுகளில் அதிக அங்கத்தவர்களையும் (ஏறத்தாழ 14லட்சம்) 45,000இற்கு மேற்பட்ட கழகங்களையும் 738 மாவட்டங்களாக வகுக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. இலங்கையில் லயன்ஸ் கழகங்கள் பெருமாவட்டம் 306 என்று வகுக்கப்பட்டு இதன்கீழ் மூன்று மாவட்டங்களாக - 306A, 306B, 306C என்று பிரிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. தற்போது வடபிரதேசத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306Bஇல் சேவையாற்றி வருகின்றன.

அண்மைக் காலத்தில் வடபிரதேசத்தில் லயன்ஸ் கழகங்கள் வசதியற்ற மக்களுக்கு மனிதாபிமான நல்ல பல சேவைகளை செயற்படுத்தி வருவதால் தகுதிவாய்ந்த தரமான பிரமுகர்களை இணைத்துக்கொள்ளகூடியதாகவும் புதிய கழகங்களை ஸ்தாபிக்கக் கூடிய நிலையிலுமுள்ளன. இன்று இணையவுள்ள மல்லாகம் / தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்துடன் வடபிரதேசத்தில் 19 கழகங்கள் உள்ளன.

1. யாழ்ப்பாணம்
2. மன்னார்
3. சாவகச்சேரி
4. வட்டுக்கோட்டை
5. கோப்பாய்
6. மானிப்பாய் பரிஷ்
7. நல்லூர்
8. சுன்னாகம்
9. வவுனியா
10. வடமராட்சி
11. கொக்குவில்
12. மானிப்பாய் வட்டம்
13. தீவகம்
14. வவுனியா வட்டம்
15. உரும்பிராய்
16. இணுவில்
17. திருநெல்வேலி வட்டம்
18. அச்சுவேலி வட்டம்
19. மல்லாகம் / தெல்லிப்பழை (புதிய கழகம்)

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் அண்மைக்காலத்திற்கு முன்னர்தான் செயற்பட ஆரம்பித்தபோதிலும் இக்கழகம் மூன்று கழகங்களை குறுகிய காலத்திற்குள் ஸ்தாபித்துள்ளதையிட்டு பெருமையடைகிறோம்.

இன்று மல்லாகம் / தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்க எங்கள் மாவட்டம் 306Bஇன் உபஆளுநர் லயன் வைத்திய கலாநிதி றொகான் பெரேரா அவர்கள் தனது பாரியார் அவர்களுடனும் இன்னும் பல பிரமுகர்களுடனும் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ளார்.



லயன் டாக்டர் றொகான் பெரேரா
மாவட்ட உப ஆளுநர்.

இப்புதிய கழகத்திற்கு அதிக காலமாக பொதுச்சேவையில் ஈடுபட்டிருக்கும் திருமதி பாலாம்பிகை சிறிபாஸ்கரன் அவர்கள் (முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர்) தலைமைப் பதவியேற்று செயற்படவுள்ளார். இக்கழகத்தில் பல கல்விமான்கள் / வைத்திய கலாநிதிகள் / தொழில் அதிபர்கள் / சட்டத்தரணிகள் போன்ற பிரமுகர்கள் இணைந்து செயலாற்றவுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இக்காலகட்டத்தில், அதுவும் தெல்லிப்பழையின் பெரு நிலப்பரப்பு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியிருக்கும்போது இப்புதிய கழகத்தை ஸ்தாபிப்பது என்பது உண்மையில் பாராட்டப்படவேண்டியுள்ளது.

*குறிப்பு:* இவ் அங்குரார்ப்பண வைபவத்திற்கு அழைக்கப்பட்டுள்ள பிரமுகர்களைத் தவறாது பங்குபற்றி புதிய கழகத்தினை ஊக்குவிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் எஸ்.சிவன்நேசன்
கழகத் தலைவர்,
மானிப்பாய் வட்டம்.

லயன் நவமலர் கனகரெத்தினம்
வலயத் தலைவர்,
வலயம்: 1 - பிராந்தியம் 10.

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
மாவட்ட இணைப்பாளர்,
மாவட்டம்: 306B.


வாழ்த்துவோர்:

சீமாட்டி புடைவைக் கடல் — மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
எரிக்கணேஷ் — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சாரங்கா நகை மாடம் — கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கஜமுகன் ஹாட்வெயார் — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வினோ நகைப்பூங்கா — கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ரவி மோட்டர்ஸ் — ஸ்ரான்லி வீதி.
சிவ கணேஷன் ஸ்ரோர்ஸ் — பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-37048)

| | | | |
|---|---|---|---|
| சு. புதன். | | சனி. ராகு | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| வெ. | | | |
| செ. | கேது சந். | | |

# இந்த வார இராசி பலன்

## 23-03-2003 - 29-03-2003

### மாற்றம்

23.03.2003 இல் அனுஷம் விருச்சிக ராசியில் சந்திரன் நிற்கும். கும்பம் இராசியில் வெள்ளி மாறும்.

போர் உக்கிரம் ஈராக்கில். எமது நாட்டில் பொருள்கள் பதுக்கப்படும். தலைநகரில் சில போராட்ட உணர்வலைகள். ஆனால், சமாதானப் பேச்சு எமது நாட்டவரிடையே அதிகரிக்கும். இந்தியாவில் வடக்கு, மத்திய பகுதிகளில் குண்டுவெடிப்புகள் ஏற்படும். மேற்குநாடுகளில் செயற்கையாக பல அழிவுகளை தீவிரவாதிகள் செய்வர். மேற்கு நாடுகளும் ஈராக்கும் அணுவாயுதங்களைப் பாவிக்கும். உலகில் ஒருவித பயப்படும், பயச் சூழ்நிலை தோன்றும். அத்திலாந்திக் சமுத்திர பிராந்திய நாடுகளில் பதற்ற சூழ்நிலை உருவாகும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

தொழில் ஸ்தானத்தில் ஏனோ, தானோ என்ற சிந்தனை. ஆனால், சம்பளம் சரியாக எடுக்கின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். இதேபோன்று நீங்களும் சில வேளைகளில் காலம் கடத்துவீர்கள். சுமக்க முடியாத சுமை. மற்றவர்கள் குறை கூறுதல், பொருள் தவறுதல், சந்தர்ப்பங்களைத் தவறவிடல், நண்பர்களின் உதவி கிடைத்தல், குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிதல், வயிற்று வருத்தம், சளித் தொல்லைகள் என்பன கொடுக்கும். மாணவர்களுக்கு ஏமாற்றங்கள் ஏற்படல், வியாபாரிகள் தொழிலில் சிறப்படைதல் என்பன நடக்கும் பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்ட நாள்கள் :- திங்கள், வியாழன்.*

### இடபம்

ஒரு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற, மற்ற நாடு தலையிட்டு போரிடுவது மிகவும் வருந்தக் கூடிய விஷயமாகும். நீங்களும் வீணாக மற்றவர்களின் அலுவல்களில் தலையிடாதீர்கள். அதனால் பல துன்ப அலைகள் உங்களை நோக்கி வர இடம் உண்டு. வீடு, வாசல் சிறப்பு வரும். அரச உதவி கிடைத்தல், இசைத்துறையில் நாட்டம், தாய் வழியினருடன் மனக் கசப்பு வரும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். வாய்வு, சளி, கால், நாரிப் பிடிப்பு வர இடமுண்டு. மருந்து வியாபாரிகளுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்*

### மிதுனம்

நியாயமற்ற மனிதர்கள். அதிக முன்னேற்றம் அடையமாட்டார்கள். முன்னேற்றம் அடைவதாகத் தெரிந்தாலும் இறுதியில் தலைகீழாக அவர்கள் வாழ்வு மாறிவிடும். எனவே, நீங்களும் நியாயத்துடன் தொழில் ஸ்தானத்தில் செயற்படுங்கள். பொருளொன்று இழப்புவரச் சந்தர்ப்பம் ஏற்படும். அடிக்கடி கோபித்தல், இடமாற்ற யோசனை, நண்பர்களின் உதவி கிடைத்தல் என்பன ஏற்பட இடமுண்டு. வாய்வுத் தொல்லை, உஷ்ண பிடைகள் வரும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும். செய்தித் துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

### கடகம்

மனிதர்களின் நேர்மை காசாலும், சொல்லாலும் அளக்கப்படுகின்றது. எனவே, தொழில் ஸ்தானத்தில் மிக நிதானமாக இருங்கள். அடிக்கடி தடுமாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. நண்பர்கள் விரோதிப்பர். குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும். அரசியல்வாதிகளின் ஆலோசனைகள் கிடைக்கும். மாணவர்களுக்குச் சிறப்புச் சித்தி கிடைக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். கால் பிடிப்பு, நாரிநோ வரும். அரசியல்வாதிகள், குடும்பத்தினர், விவசாயிகள் சிறப்பு அடைவார்கள். நன்மைகள் அதிகரிக்கும் காலமாகும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

### சிங்கம்

சீறிவரும் தண்ணீர் காலகதியில் அமைதி பெற்று ஓடும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். பொருள் நிலையில் நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகளால் நன்மைகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். சிறு சிறு இழப்புக்கள் வர இடமுண்டு. தெய்வபக்தி - குடும்பயோசனை என்பனவரும். தோட்டத்துறை, வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள். தூரத்துச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- வியாழன்*

### கன்னி

பக்கத்தில் உள்ள தாக்கத்தைக் கண்டு - எமது எண்ணெய் வியாபாரிகள் எண்ணெய்களை பங்கரில் வைத்துவிட்டார்கள் போலும் என மக்கள் பேசிக்கொள்கின்றார்கள். சகோதரர்களுக்கு முன்னேற்றங்கள் ஏற்பட இடமுண்டு. ஓடியாடித் திரிவதனால் பல காரியங்களைச் செய்வீர்கள். பிறருக்கு ஆலோசனை சொல்லுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். சிலருக்கு இடமாற்றங்கள் கொடுக்கும். பொருள் வரவு, இனஜன உதவியும் மாணவர்களுக்கு நன்மையான மாற்றங்களும் ஏற்படும். கால்வருத்தம், வாய்வுத்தொல்லை, சளித்தொல்லை ஏற்படும். வைத்தியம் செய்யவும். பிரயாணத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்*

### துலாம்

மக்களின் அவதிகளால் தான் பலபொருள்களை வியாபாரிகள் பதுக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. போலியானவர்கள் இறுதியில் பல துன்பங்களை ஏற்றுக்கொள்ள இடமுண்டு. இனஜன உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும். பணவரவு ஏற்படும். விட்டுவிட்டு சிறுசிறு மாற்றங்கள் ஏற்படும். உடல் நிலையில் கவனம். சளி, வாய்வு, விறைப்புக் கொடுக்கும். தந்தை வழியினருடன் வாக்குக்கலகம் வரலாம். மாணவர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். புதிய வருமானத்தில் உங்கள் அக்கறையின்மையால் பல இழப்புக்கள் வரும். சட்டத்துறையினர், தோட்டத்துறையினருக்குப் பல நன்மைகள் கிடைக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்

### விருச்சிகம்

உருத்திர தாண்டவம் உலகமெல்லாம் ஆடுவதனால் தான் பூமியின் பாரம் சமநிலைப்படுகின்றதென்றால் விதிவலிதாக நகர்வதாக எண்ணத்தோன்றுகின்றது. தொழில்ஸ்தானத்திலும் உங்களின் உத்தரத் தாண்டவம் இருக்கும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். பொருள் இழப்பு, வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் சகஜம். இசைத்துறை நாட்டம், சகோதரர்களுடன் அபிப்பிராய பேதம் ஏற்படல், நண்பர்கள் உதவுவார்கள், மாணவர்கள் நன்மை அடைவார்கள். மருத்துவத்துறை, விவசாயத்துறை, இரும்புத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்*

### தனுசு

உங்களின் பலனால் சோதிடர்கள் கூடத் தப்புகள் செய்துவிடுவார்கள். எனவே அதற்காக சோதிடரைக் குறைகூறமுடியாது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். சகோதர வழியினருடன் மனஸ்தாபப்பட இடமுண்டு. இடமாற்றம், புதிய பொறுப்புக்கள் தேடிவரும். காலில் வருத்தம், வாய்வுத் தொல்லை, சளி வருத்தம் வரலாம். பிரயாணத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள்*

### மகரம்

பொருள் வரவேண்டுமாயின் தொழிலில் பயிற்சி, அறிவு, மக்களின் நம்பிக்கை, அன்பு என்றும் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்பு ஏற்படும். ஆனால் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முயற்சி ஏற்படும். தொழில் இடத்தில் சிறுமாற்றங்கள், பிரயாணயோசனை, பிறருக்கு ஆலோசனை போன்றனவும் கால் வருத்தம், நாரிநோ, சளித்தொல்லை என்பனவும் கொடுக்கும். தோட்டத்துறை, சந்தைவியாபாரம், கடல் தொழில், எண்ணெய் வியாபாரம் போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்க இடமுண்டு. மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.*

## மகாதேவா ஜோதிடம்

### கும்பம்

மக்களில் ஒரு பகுதியினர் கலங்கியபடிதான் இருக்கிறார்கள். அது விதிப்பலனின் செயற்பாடால்வரும் திசைமாற்ற உணர்வலைகளாகும். எனவே நீங்கள் உணர்வலைகளுக்கு அதிக இடங்கொடாமல் கடமை செய்து வாருங்கள். தொழில்ஸ்தானத்தில் குறை கூறுவார்கள். எதிர்ப்பாலாருடன் போட்டிகள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். பொருள் வரவு கொடுக்கும். கால்வருத்தம் கொடுக்கும். சளித்தொல்லை ஏற்படும். பிரயாணத்துறை, சட்டத்துறை, சந்தைத்துறை சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### மீனம்

எதையும் தூக்கி எறிந்துவிட்டால் அது தானாகவே திரும்பிவரும். விரும்பினால் எடுக்கலாம் அல்லது விட்டுவிடலாம். இதேநிலை தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு ஏற்படும். எதையும் வெளிப்படையாகப் பேசி வீண்பழி கேட்பீர்கள். பொருள்வரவு ஏற்படும். எதிர்ப்பாலார்கள் நன்மை செய்வார்கள். மறதியால் பொருள் தவறலாம். புதிய தொழில் முறை நாட்டம் கொடுக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு நல்லதல்ல. கடல்துறை, மருத்துவத்துறை, பிரயாணத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.*

---

கடலில் மோதல் சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க

# கடற்படை அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் கூட்டத்தை 3 வாரங்களில் கூட்ட இணக்கம்

## அரசு - புலிகள் ஜப். பேச்சு குறித்து நோர்வே அறிக்கை

ஹக்கோனி, மார்ச் 23

இலங்கை அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளையும் அரசியல் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டம் ஒன்றை மூன்று வாரங்களுக்குள் கூட்டுவதென இரு தரப்பினரும் ஜப்பான் ஹக்கோனியில் நேற்றுமுன்தினம் முடிவடைந்த சமாதானப் பேச்சுக்களில் இணங்கினர்.

போர்நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்ப, கடற்படைப் பிரிவுகளின் செயற்பாட்டுக்கு ஆக்கபூர்வமான ஏற்பாடுகளைச் செய்யவே இக் கூட்டம் கூட்டப்படும். போர்நிறுத்தத்தின் உறுதிப்பாட்டைச் சீர்குலைக்கக்கூடிய சம்பவங்கள் கடலில் எதிர்காலத்தில் நடைபெறுவதைத் தடுப்பதே இக் கூட்டம் கூட்டப்படுவதன் நோக்கமாகும்.

ஹக்கோனியில் கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுக்களின் முடிவையடுத்து நோர்வே அரசாங்கத்தினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அண்மையில் கடலில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பெரும் கவலை தெரிவித்ததோடு போர்நிறுத்தம் பலப்படுத்தப்பட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் இருதரப்பினரும் பேச்சுக்களின் போது சுட்டிக்காட்டினர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்குறிப்பிட்ட கூட்டம் நோர்வே அரசினாலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராலும் கூட்டப்படும்.

கைது செய்யப்படும் இராணுவத்தினர், புலிப் போராளிகள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் ஒத்துழைப்புடன் நடைமுறைகளை வகுப்பது உட்பட தரையில் பாதுகாப்பு நிலைமைகளை மேலும் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவும் இணக்கம் காணப்பட்டது. அரசியல் பேச்சுக்களின் போது ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான சமஷ்டி முறையை உருவாக்க இருதரப்பினரும் மீண்டும் உறுதியளித்தனர். வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் ஒரு யோசனையை முன்வைத்தது. அவ்வாறான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு ஆதரவு வழங்குவதை விடுதலைப் புலிகள் சாதகமாகப் பரிசீலிக்க விருப்பம் தெரிவித்திருக்கின்றனர். (ஒ)

# வடக்கு உலமாக்கள் கூடி போர் குறித்து ஆராய்வு

புத்தளம், மார்ச் 23

ஈராக் போர் நிலைமை குறித்து வடக்கு உலமாக்களின் நலன்புரிச் சங்கம் நேற்றுமுன்தினம் காலை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

சங்கத்தின் தலைவரான மௌலவி எஸ்.எச்.எம்.முபாரக் (ரஸாதி) தலைமையில் கூடிய குழு பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

உலக முஸ்லிம்கள் நோன்பு நோற்று "தஹஜ்ஜத்" போன்ற வணக்கங்களை நிறைவேற்றி இறைவனிடம் அனுதினமும் பிரார்த்தனை செய்யுமாறும் ஈராக் நாட்டின் வெற்றிக்கு இறைவனிடம் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் பிரார்த்தனையில் வேண்டுமாறும் பள்ளிவாசல்களிலும் தொழுகையின் பின்னர் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம்!" இவ்வாறு தீர்மானம் தெரிவிக்கின்றது. (ஒ)

சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்தில்

# பங்கீட்டு அடிப்படையில் எரிபொருள் விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 23

எரிபொருள்கள் பற்றாக்குறை ஏற்படாதிருப்பதற்காக சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்கீட்டு அட்டைக்கு வாராந்தம் மூன்று லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் சகல கிளைக்கடைகள் மூலம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தினால் வழங்கப்படும் விசேட அட்டை மூலம் தினமும் நூறு ரூபாவுக்கு மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படும்.

வாகனத்தின் தன்மைக்கேற்ப தினமும் டீசல் விநியோகிக்கப்படுமெனவும் இரண்டு சில்லு உழவு இயந்திரத்திற்கு ஐந்து லீற்றர் வீதமும், நான்கு சில்லு உழவு இயந்திரம், மினிபஸ் ஆகியவற்றிற்கு 15 லீற்றர் வீதமும் லொறிக்கு 20 லீற்றர் வீதமும் டீசல் சங்க எரிபொருள் நிலையத்தில் வழங்கப்படுமென சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (ஓ-117)

குருநகர் சந்தையில்

# மனித பாவனைக்குதவாத மாட்டிறைச்சி அழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

குருநகர் சந்தையில் உள்ள மாட்டிறைச்சிக்கடையில் விற்பனை செய்வதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த மனிதபாவனைக்குதவாத 60 கிலோ இறைச்சி அழிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 19 ஆம் திகதி மாநகர சபையின் கொல்களத்தில் வெட்டப்படாத சட்டவிரோத இறைச்சி குருநகர் சந்தை மாட்டிறைச்சிக் கடையில் விற்பனைக்காக பதுக்கிவைத்திருந்தபோது மாநகரசபை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சந்தை மேற்பார்வையாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் எமது பகுதி பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அதனைக் கைப்பற்றி, மனித பாவனைக்கு உதவாதது என்ற காரணத்தினால் 60 கிலோ எடையுடைய மாட்டிறைச்சி முழுவதும் அழிக்கப்பட்டது. இறைச்சி வியாபாரியும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார் - என்றுள்ளது.

# ரிதம் மியூசிக்சென்ரர்

C.Dக்களின் சொர்க்கபுரியாக இன்று தென்னிலங்கை மண்ணில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்

**"ரிதம் மியூசிக் சென்ரர்"**

ஸ்தாபனத்தார் - யாழ்.வீடியோ ரசிகர்களுக்கு வழங்கும் இனிய செய்தி

அன்றைய "பராசக்தி" திரைப்படம் தொட்டு இன்றைய "அன்பு" திரைப்படம் வரைக்குமான V.C.Dக்களையும் Audio C.Dக்களையும் D.V.Dக்களையும் மிகவும் நிதானமான விலையிலும் தரம் குன்றா வகையிலும் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள........

ரிதம் மியூசிக் சென்ரர்

79/H₁, றோயல் சுப்ப மார்க்கற், கெய்சர் வீதி, கொழும்பு - 11.

T.P.: 440296
0777 882958
0777 574160

(15845)



30 20 10 9 8 7 ... இன்னும் ஓரிரண்டு தினங்களில்

**O/L பரீட்சை முடிவுகள் வெளிவந்து விடலாம்?**

உங்களுடைய

கற்கைகளைத் திட்டமிடும் போது கல்வி அமைச்சினால் அறிமுகப் படுத்தப்பட்ட 'பொதுத் தகவல் தொழில் நுட்பப் பாடத்துக்கான உங்கள் தெரிவு ?.........

விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டத்துக்கு அமைவாக புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன,

ஏனைய புதிய பிரிவுகள்

Ms Word. Adobe Photoshop.
Ms Excel. Adobe Page Maker.
Ms Access. Adobe Go live.
Ms Power Point. Internet, E - Mail.
Ms Front Page. Web Designing.
Corel DRAW.

23 - 03 - 2003 10 a.m & 3 p.m

GIT

021 2223497

Center for Computer Studies CC

**Computer College**
**கணனிக் கல்லூரி**

337, Kasthuriyar Road, Jaffna.

E - Mail : collegeofcom@bharatmail.com


யா/இணுவில் மத்திய கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2003

மேற்படி கூட்டம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 05.04.2003 சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு தலைவர் திரு.துரை எங்கரசு தலைமையில் நடைபெறும். அங்கத்தவர் தவறாது சமுகந்தரவும்.

01. பெற்றோர் தம் சந்தாப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்யவும்.
2. பிரேரணைகள் இருப்பின் 25.03.2003ஆம் திகதிக்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

திரு.துரை எங்கரசு, தலைவர். (15796) திரு.க.தருமநாயகம், செயலாளர்.

## துயர் பகிர்கின்றோம்

15.03.2003 சனிக்கிழமை லண்டனில் காலமானவரும் நீர்வேலி கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையின் முன்னாள் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளை வகித்து ஆலய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய

ஆசிரிய திலகம், சமூக துரை
**கந்தப்பு இராசதுரை**

அவர்களின் மறைவையொட்டி எமது துயரினைப் பகிர்ந்துகொள்ளுகின்றோம். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும்; வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் அதிபராகவும் பணிபுரிந்து இளைப்பாறியதோடு -

நீர்வேலி தெற்கு ஐக்கிய பண்டசாலைச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம், ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம், சமுதாய முன்னேற்றக்கழகம், பாலர் பகல் விடுதி, நீர்வேலிக் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் தலைவர், செயலாளர், பொருளாளர் எனப் பல பதவிகளை வகித்து கல்விப் பணி, சமயப் பணி, சமூகப் பணி எனப் பல பணிகள் செய்துள்ளார். இவரது இப்பணிகளை நினைவுகூர்ந்து ஆன்மா சாந்தியடைய நீர்வைக்கந்தனின் பேரருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
நீர்வேலி கந்தசுவாமி கோயில்,
கிராம மக்கள்.

நீர்வேலி தெற்கு.
நீர்வேலி. (15848)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 20 - 05 - 1931



உதிர்வு 21 - 03 - 2003

**முருகன் சிவபாதசுந்தரம்**

21.03.2003 அன்று இறைவனடி சேர்ந்த முருகன் சிவபாதசுந்தரம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

கோட்டைக்காடு,
சுன்னாகம். (15854) - நண்பர்கள்.

## மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2001, 2002 கல்வி ஆண்டுகளில் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து வெளியேறிய மாணவர்களை உடன் தொடர்புகொள்ளுமாறு நிறுவனத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தேசிய தொழில் தகைமை நிறுவனத்தில் பதிவுசெய்துகொள்வதற்காக மேற்படி மாணவர்களின் விவரங்கள் தேவைப்படுவதால் உடன் தொடர்புகொள்ளுமாறு பணிப்பாளர் த.இராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

(ஐ-6)

## கருத்தரங்கு

அச்சுவேலி,மார்ச்23

நிவிகளான மருத்துவப் பொருள்களின் பயன்பாடும் பாவனையும் தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

பிரபல இருதயச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீனிவாசன் ரஞ்சன் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

(ஐ-11)

## மாதாந்த உதவிப் பணம்

நவாலி,மார்ச்23

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பனவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் மார்ச் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-100)

## நல்லூர் பிரதேச விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்23

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி இ.இரத்தினராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற நல்லூர் உதவிப் பிரதேச செயலர் சி.வேன்முருகோன்பிள்ளை, ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்மகேந்திரன், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி, ஜே. ரூபசிங்கம், நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.சுஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஐ-180)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்23

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமிய மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி இ.இரத்தினராஜா தலைமை வகிப்பார்.

இக்கலந்துரையாடலில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான பல வேறு விடயங்கள் ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-12)

### மணமகன் தேவை

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று தற்போது கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெற்ற யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுப் பெண்ணுக்கு (ஒரு பிள்ளையுடன் விவாகரத்துச் செய்தவர்) 45 வயதுக்குட்பட்ட, தீய பழக்கமற்ற, படித்த மணமகன் தேவை.

தொடர்பு:- T.மகேஸ்வரன் (சாயிமருந்துக்கடை) புகையிரத வீதி, மல்லாகம். (15856)

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 1962 - 06 - 04



உதிர்வு 2003 - 02 - 13

**திருமதி இராசாத்தி கார்த்திகேசு**
*(லலி - இரத்தினம்)*

*அன்பின் அம்மாவே! ஆசை கொண்ட தாயாரே!*
*இராசாத்தி என்பதற்கு இலக்கணமானவரே!*
*ஈகையால் உயர்ந்து நின்று ஈர்க்கப்பட்டவரே!*
*அன்பென்ற சொல்லுக்கே வாழ்வில் உயிர் கொடுத்தாய்!*
*வீட்டின் ஒளி விளக்கு அன்றே அணைந்ததம்மா!*
*காலங்கள் ஓடினாலும் உங்கள் நினைவுதான் மறக்கலாமோ?*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன ஆதரிப்பார் யாருமில்லை.*
*வேதனையைத் தந்துவிட்டு வேகமாய்ச் சென்றதேனோ?*

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறுவதோடு, வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 25.03.2003 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
தர்மலிங்கம் கார்த்திகேசு (இரத்தினம்),
*தச்சந்தோப்பு, கைதடி.*

தற்போதைய முகவரி:
*நீர்வேலி வடக்கு குறுக்கு றோட், நீர்வேலி.*

**கணவர் (இரத்தினம்), பிள்ளைகள்.** (15861)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு இராசதுரை
(முன்னாள் அதிபர்)

யாழ்ப்பாணம், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு இராசதுரை அவர்கள் 15.03.2003 சனிக்கிழமை இரவு லண்டனில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை கந்தப்பு - தெய்வானையின் புதல்வரும் பூரணம் அவர்களின் அன்புக் கணவரும் அன்பானந்தர் (வாணி ஏஜென்சி, லண்டன்), சிவசக்தி சிவானந்தவல்லி (ஆனந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதினி (வாணி ஏஜென்சி), சிவராஜசிங்கம், ராகுலபாஸ்கரன் அவர்களின் மாமனாரும் அமுதவாணி, அகிலன், மரியா, சோபன், துர்க்கா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.03.2003 வியாழக்கிழமை மாலை 4மணிக்கு City of London Manor park மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:
வாணி ஏஜென்சி
தொ.பே.: 0208-4718366
வீடு: 0208-5521273

விலாசம்:
*39, Essex Road, Manor Park, London EIR.*

தகவல்:-
க.குமாரசுவாமி
வெள்ளவத்தை.

(சி-37009)

## முருகன் சிவபாதசுந்தரம்

சுன்னாகம், கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சிவபாதசுந்தரம் நேற்றுமுன்தினம் (21.03.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் உதயகுமாரன் (U.K.), உதயகுமாரி (U.K.), உதயணன், உதயமலர் (கனடா), உதயகலா (ஆசிரியை, ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்), உதயகலைமகள், உதயசூரியன் (டோகா), உதயரமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரங்கபாணியின் (பிரான்ஸ்) சகோதரனும் புவனாம்பிகை (U.K.), சாம்லெஸ்லி (U.K.), உஷானி, மனோகரன் (கனடா), செல்வக்குமார், ஜோதி, தர்மன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகா, அஜித், பினோ, வினி, வெலன், மயூரன், மதிர்ஷியா, மனோஷா, சிவானி, கலி, விது, பது, கிஷோர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தொந்தனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"உதயவாசம்"*
*கோட்டைக்காடு,*
*சுன்னாகம்.* (15853)

தகவல்:-
சி.உதயசூரியன் (மகன்),
உதயா போட்டோ உரிமையாளர்கள்.

## செ.செல்வரட்ணம்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட செ.செல்வரட்ணம் (முன்னாள் பிரதம லிகிதர், யாழ். போதனா வைத்தியசாலை, ) கடந்த 2003.03.15ஆம் திகதி சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (ஓவசியர்) - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புஸ்பதேவியின் அன்புக் கணவரும் திருமதி ஜெ.றோசராணியின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திருநாமலிங்கரட்ணம் (ராஜா மெடிக்கல் உரிமையாளர்), ஜெயரட்ணம் (சுங்கப்பரிசோதகர்), விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுரேஸ்குமார் (U.K.), ரமேஸ்குமார், ஜெயரமணி, லோகேஸ்வரன், சுசிகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2003.03.16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*303, பிரதான வீதி,*
*திருகோணமலை.*
*தொ.பே.: 0777-293354* (C-37056)

தகவல்:
திருமதி R.ஜெயரட்ணம்.

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.




sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

### யாழ்.நகரின் மத்தியில்

# புதிய படைத்தளம் அமைப்பதற்காக மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்னால் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் பழைய கட்டடப் பகுதி மற்றும் அதனை அண்டியதாக அமைந்துள்ள வடி வீட்டுப் பகுதிகளில் இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினர் துரித மிதிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினர் இப்பகுதிகளில் உள்ள பற்றைகள் மற்றும் கட்டட இடிபாடுகள் என்பனவற்றை அகற்றிய பின்னர் மிதிவெடி அகற்றும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.கோட்டை தாக்குதலின் பின்னர் கோட்டையை அண்டிய யாழ். மாநகர சபையின் பழைய கட்டடப் பகுதி மிதிவெடி அபாயம் உள்ளதால் பொது மக்களின் பாவனைக்கு விடப்படாமல் இருந்து வந்தது. அத்துடன், கழிவுகளும் இப்பகுதிகளில் கொட்டப்பட்டுவந்தன.

யாழ்.நகரப் பகுதியின் மையத்தில் 512ஆவது படைத் தலைமையகம் அமைந்துள்ளதால் ஞானம்ஸ் மற்றும் சுபாஸ் ஹோட்டல்கள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து வெளியேறி நிலைகொள்வதற்கு யாழ். மாநகர சபையின் பழைய கட்டடப் பகுதியில் முகாம் ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே தற்போது இப்பணிகளில் இம்மிதிவெடி அகற்றும் பணி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ். மாநகர சபைக்கு நேற்றுமுன்தினம் சென்ற படை உயர் அதிகாரி ஒருவர் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அரச காணிகள் தொடர்பான வரைபடங்கள் மற்றும் தகவல்களை யாழ். மாநகர சபையின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-8-30)

# தொழிற்சங்கப் போராட்டத்தில் மீண்டும் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு தரக்கோரி தமிழர் ஆசிரியர் சங்கம் 2ஆம் கட்டமாக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

கடந்த வாரம் சங்கம் மேற்கொண்ட போராட்டத்திற்கு உரிய பதில் கிடைக்காததை அடுத்து, அடுத்த கட்ட தொழிற்சங்கப் போராட்டத்திற்கு சங்கம் தயாராகி வருகின்றது என்றும் -

இந்தப் போராட்டத்திற்கான முன்னோடி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணை நாவலர் ம.வியில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்றும் - சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல தாய்ச் சங்க நிர்வாகிகள். மாவட்ட, வலய, கிளைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

(எ-3-6)

# "இதயத்தில் ஓர் இடம்"

*நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.*

(யோவா.6:68)

## தவக்காலச்சிந்தனை - 19ஆம் நாள் -

தமது வார்த்தை ஒன்றினாலே இவ்வுலகை உண்டாக்கி மனிதனுக்கு வாழ்வளித்துவரும் இறைவனை மறந்து இன்றைய மனிதன் உலகில் வாழ்ந்துவருகின்றான். அணு சக்தியைப் பயன்படுத்தி அரிய சாதனைகளை செய்யமுயலும் மனிதன் அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்ற பேருண்மையை மறந்து, விஞ்ஞானத்தின் விந்தையால் இஞ்ஞாலத்தில் எதுவும் செய்துவிடலாம் என்னும் மமதையில் ஒளிமயமான ஆண்டவரின் கட்டளைகளை உதாசீனம் செய்து வாழ்கின்றான். இறைவன் இல்லாதுவிட்டால் தாங்கள் இருக்கமுடியுமா என்பதை உணராமல் கடவுளைக் கண்டது யார்? என அறிவீனமாகப் பேசவும் துணிந்துவிட்டனர் சிலர். காரணம் அவர்கள் எதற்காக இவ்வுலகில் பிறந்தார்கள், எதற்காக வாழ்கின்றார்கள்? எங்கு செல்கின்றார்கள்? என்பவை பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. இவ்வுலக சிற்றின்பம் தங்களுக்கு பேரின்பம் அளிப்பதாக எண்ணி மதி மயங்கி வாழ்கின்றனர். இந்நிலை எம்மிடையே நிச்சயம் மாறவேண்டும். மனித வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்து இவ் வாழவில் நாம் செய்யும் பாவபுண்ணியங்களே நித்தியத்திற்கும் எமக்கும்

**எஸ்.எம்.வுளோறன்ஸ்**

பேரின்பமளிக்கும் என்ற சிந்தனையை இதயத்தில் ஏற்று இறை வார்த்தையில் விசுவாசம் கொண்டு அவரது அன்புக் கட்டளைகளுக்கு பணிந்து வாழ்வோம். குறிப்பாக இத்தவக் காலத்தில் நாம் செய்யும் தவ முயற்சிகள் இருளிலே வாழ்பவர்களுக்கு ஒளிவிளக்காக விளங்கவேண்டும். மனிதனை இறைவனோடு இணைக்க அவனை இறை அன்பில் பிணைக்க இறைமகன் தம்மையே பலியாக்கினார். ஆகவே, நாமும் இறைவனில் இருந்து பிரிந்திருப்பவர்களை இறைவனுடன் இணைக்க இறை அன்பிலும், பிறரன்பிலும் நாளுக்குநாள் வளர இறை கட்டளைகளை பிரமாணிக்கத்துடன் கடைப்பிடிக்க இக்காலத்தில் இருந்தே இறைவனுக்கு இதயத்தில் ஓர் இடமளித்து வாழ்வோம்.


# WANTED

For a prestigious Restaurant within Jaffna Town.

1. **Receptionist**
   Age within 50 yrs. MALE/FEMALE with knowledge of Basic Accounting and Computers. Able to speak in all three languages. To handle Reservations and day to day accounting.
2. **Stock Clerk**
   Age within 50 yrs. Good handwriting and English essential. To handle day to day movement of Stock and Provisions.
3. **Security Guards**
   Age between 30-40 yrs. Smart personality. Able to speak in all three languages. English essential. Salary Rs.4,500/- per mensum. Other terms and conditions as required by us.
4. **Steward**
   With experience. Age over 20 yrs. Willing to stay overnight. Meals provided.
5. **Kitchen Help**
   Age between 20-30yrs. Meals provided. Willing to stay over night.

Please apply wi... 5 days of this advertisement.
For 1,2,4&5 Salary, terms and conditions negotiable.
Applications to:

**MANAGER,**
**OLD PARK RESTAURANT (PVT.) LTD.,**
*NO.40, KANDY ROAD, CHUNDIKULI, JAFFNA.*

(15866)


## பாராட்டு விழா

'கலாபூஷணம்' விருது பெற்ற பண்டிதர் அ.ஆறுமுகம், தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்ற பண்ணாகம் கிராம அலுவலர் திருமதி சிவபாக்கியநாதன் ஆகியோரைப் பாராட்டி நடத்தப்படும் விழா பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் இ.தம்பையா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-28)

## உடற்பயிற்சிப் போட்டி

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறும். (எ-28)

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்23

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்கான சமுர்த்தி வங்கிச் சங்கம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் சங்க கட்டடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் சு.பேரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்தத் திறப்புவிழாவில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்சிவபாதசுந்தரம், விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோர் சிறப்பு விருநதினர்களாகவும், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் இரா.தர்மலிங்கம், நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.அரசரெத்தினம், நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் ச.பெ.தில்லைநாதன ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(எ-6)

## கூட்டணி அலுவலகத்தில் கலந்துரையாடல்

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களுமான வீ.ஆனந்தசங்கரி, ந.ரவிராஜ் ஆகியோர் கலந்துகொள்ளும் விசேட கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.நகரப் பகுதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டணியின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்கள் மற்றும் அபிமானிகளையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-10)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 8ஆம் பக்கத்தில் வெளியான பொன்னையா அரியரத்தினம் என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் அன்னாரது நல்லடக்கம் கனத்தை மயானத்தில் நடைபெற்றது என இருக்க வேண்டும். கனத்தை இந்து மயானத்தில் என்று பிரசுரமாகியது தவறாகும். அதனை திருத்தி வாசிக்கவும்.

## வேரக்கேணி கிளை மீண்டும் இயங்குகின்றது

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் வேரக்கேணி கிளைக்கடை மீண்டும் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் கிளைக் கட்டடம் சேதமடைந்ததை அடுத்து இப்பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் கிளைக்கடை திறக்கப்பட்டுள்ளது.

நுணாவில் கிழக்கு (கிளை இல.3), வேம்பிராய் (கிளை இல.17) ஆகியவற்றை விரைவில் தனியார் வடுகளில் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

(எ-117)

# வாசகர் திருமுகம்

## கைதடி, நாவற்குழி பாலங்கள் திருத்தப்படுமா?

யாழ்.மாநகர நுழைவாயிலில் இரண்டு முக்கியமானதும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய கைதடி, நாவற்குழி பாலங்கள் இதுவரை புனரமைக்கப்படாது அப்படியே உள்ளன. ஏ-9 கண்டி வீதியில் தற்போது போக்குவரத்து அதிகரித்துள்ளது. பெருமளவானோர் தென் இலங்கையிலிருந்து யாழ். நகருக்கு படையெடுக்கின்றனர். இவர்கள் இப்பாலங்கள் திருத்தப்படாமையால் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அதாவது 2000ஆம் ஆண்டில் போர் அனர்த்தத்தால் சேதமுற்ற இப்பாலங்களை படையினர் தற்காலிகமாக திருத்தி அமைத்தனர். எனினும், வீதியின் அகலம், குறுகியதாய் இருப்பதால் இருவழி போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் உள்ளது. அதாவது ஒரு வாகனம் ஒரு திசையிலிருந்து வந்தால் எதிர்த்திசையிலிருந்து வரும் வாகனம் சற்றுப் பொறுத்து அது சென்ற பின்பே பாலத்தைக் கடந்து போகமுடியும். இதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் நேரம் பிந்தி யாழ்நகருக்கு செல்ல வேண்டியுள்ளது. இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனத்தில் கொள்ளாததுதான் வியப்பாக உள்ளது.

எனவே, இப்பாலங்களை விரைவாகப் புனரமைத்து மக்களின் பாதுகாப்பானதும் சிறப்பானதுமான போக்குவரத்தை உறுதி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

*சாவகச்சேரி.* **- சீலன்.**

## போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் விளக்கம்

14.03.2003 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 7ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கே.சசி அவர்களினால் வரையப்பட்ட 'வாசகர் திருமுகம்' சம்பந்தமாகப் பின்வருவனவற்றை அறியத்தருகின்றேன்.

அத்திருமுகத்தில் திரு.கே.சசி அவர்களினால் அவரது மேற்படி திருமுகத்தில் "2003.03.01 இல் இருந்து பாதை இல.986 இன் பேருந்து சேவைகளில் காலையிலும், பிற்பகலிலும் மாணவர்கள் மாத்திரமே பயணஞ்செய்ய முடியும் எனவும் ஏனையோர் பிரயாணஞ்செய்ய முடியாதெனவும் அறிகின்றோம்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பிழையான தகவலாகும். இப்பாதைச் சேவைகள் அனைத்தும் முன்பு செயலாற்றப்பட்டது போலவே தொடர்ந்தும் மாணவர்களையும் ஏனைய பயணிகளையும் சேர்த்தே ஏற்றிச் செல்கின்றன என்பதை அறியத்தருகின்றேன்.

தயவுசெய்து இதனை மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டுத் தங்களது பத்திரிகையில் பிரசுரித்து உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*வ.பி.போ.சபை* **- பொது முகாமையாளர்.**


## இந்து வாலிபர் சங்கம்

வட்டுக்கோட்டை

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

எமது சங்கத்தால் 19.03.2003 புதன்கிழமை நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்.

1ஆம் பரிசு - 463
2ஆம் பரிசு - 3667
3ஆம் பரிசு - 475

ஆறுதல் பரிசுகள் 362, 835, 2000, 1567, 2057, 2830, 3292.

(15880)

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்மா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்க விளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

**ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.**

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*
Dr.R.K.நவனீதன் DYNS, SMP, NC.
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.பயனியர் விடுதி
(வெலிங்ரன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசன பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

முகாம் நடைபெறும் நாள்கள்:
மார்ச் 18ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை.

(15878)

## ராம்கோ சிமெந்து
## Ramco Cement

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சிமெந்து பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஏக விநியோகஸ்தர்

**ஈஸ்வரபகவான் அன் கம்பனி**

*91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

தொ.பே.இல. 2222350

(15887)



ஆச்சரியம்!

ஆனால்...

உண்மை!

15 வருடங்களுக்குப் பின்பு மீண்டும்

யாழ்ப்பாணத்தில்

**ஏஷியா** சைக்கிள்கள்

வடமாகாணத்தின் ஏகவிநியோகஸ்தர்

## ஈஸ்வரன் ரேடர்ஸ்

69, கஸ்தூரியார் வீதி.

T.P. 021-222 - 2813

மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்!

(C/37070)


குருவே துணை

## ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசெஸ்
## கைதடி வடக்கு,
## கைதடி

தவத்திரு. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளினதும், சச்சிதானந்த அருளொளி செல்லம்மா மாதாஜீ அவர்களினதும் அருளாசியுடன் 2000ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த மேற்படி நிறுவனத்தை பூரணமாகத் திருத்தம் செய்து 31.03.2003 காலை 8.00 மணிக்குத் திறப்பதற்கு அருள் கூடியுள்ளது.

எம்மிடம் பலசரக்குச் சாமான்கள்,
வீட்டுக் கட்டடப் பொருள்கள், கிருமிநாசினி,
உரவகைகள், கோழித்தீன் வகைகள்,
ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

உறவினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்பாக அழைக்கின்றேன்.

- இ.குழந்தைவடிவேலு J.P.

### வர்த்தகப் பெருமக்களே!

15.01.2003 இல் இருந்து 30.03.2003 வரை தற்காலிகமாக வேறு ஒருவரிடம் எதுவித நலனையும் எதிர்பாராமல் அவரது குடும்ப உயர்வுக்காக எனது நேரடி மேற்பார்வையில் எனது நிறுவன வளம் அனைத்தையும் கையளித்திருந்தேன். எனது வர்த்தக நடவடிக்கைகளை 31.03.2003முதல் மீண்டும் நான் நேரடியாகப் பொறுப்பேற்கவுள்ளேன். மேலும் எனது நிறுவனத்தின் பேரால் மேற்குறிப்பிட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களை 07.04.2003 இற்கு முன்னர் செலுத்துவதற்கு ஆவன செய்வேன் என்பதை வர்த்தகப் பெருமக்களாகிய உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசெஸ், கைதடி.
தொ.இல. : 222 3197

(இ.குழந்தைவடிவேலு J.P.)

(15883)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்
விக்னபகுருபன் (Level IV Civil) அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி விஜயரத்தினம் பரிமளா

அவர்கள் நேற்று (22.03.2003) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார். அன்னாரது பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மொறட்டுவ பல்கலைக்கழகம்
பொறியியல் பீட மாணவர்கள்.

(C/37071)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,மார்ச்23

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி மறுநாள் புதன் கிழமை காலை வரை விசேட பூசையுடன் நிறைவுபெறும்.

கடந்த செவ்வாய்க்கிழமை விளக்கு ஏற்றப்பட்டு தினமும் பிற்பகல் வேளையில் விசேட பூசை வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை என்பன நடைபெற்று வருகின்றன. (எ-28)

★ ★ ★

தென்மராட்சி,மார்ச்23

சாவகச்சேரி சப்பச்சி மாவடி சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக மண்டலபூர்த்தியும், சங்காபிஷேகமும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 11 மணிமுதல் நடைபெறவுள்ளன. (எ-117)

## கோப்பாய் கோட்ட அதிபர்கள் கூட்டம்

வலி.கிழக்கு,மார்ச்23

கோப்பாய் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட சகல பாடசாலை அதிபர்களும் இதில் தவறாது கலந்துகொள்ள வேண்டும் எனக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (எ-180)

## திறப்புவிழா

செம்பியன்பற்று,மார்ச்23

புனரமைக்கப்பட்ட கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே.பி.செல்வராஜா அடிகளார் ஆலயத்தைத் திறந்து வைப்பார். (எ-36)

## புராணபடனப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்23

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்தும் புராணபடனப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ)


## CHEMISTRY CENTRE

பலாலி வீதி, கந்தர்மடம்.

**"ORGANIC"**
Mon., Fri., 5 - 6 p.m.
**"CHEMISTRY PAPER"**
Mon., Fri., 6 -7 p.m.
By:- அன்பழகன்

**A/L 2005**
CHE - Mon., Fri. 3-4 p.m.
PHY - Mon., Fri. 4-5 p.m.
By:- கருணாநிதி
Bio- Mon., Fri. 5-6 p.m.
By:- தற்பரன்
Maths - Tue., Thurs. 5-6 p.m.
By:- பிரதீபன்

(37068)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், மீனா, மந்த்ரா, வடிவேல், கோவைசரளா
**பாட்டி**
10.30, 2.30, 6.30

நிறைஞ்சனாஸ்
அர்ஜுன், பூஜா நடித்த
**சூரிய பார்வை**
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பி.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
**HOLLOW MAN**

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
**சொக்கத்தங்கம்**
(இனிய பாடல்கள் நிறைந்த திரைப்படம்)
காட்சிகள் தினசரி : 11.00, 1.00, 7.00 (பி.நேரம்)

(15881)


## 180 ஆவது நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
11 - 04 - 1978



உதிர்வு
28 - 09 - 2002

## அமரர் கணபதிப்பிள்ளை பிரபாகரன்

"பூவிரிந்த பூமிதன்னில் தேன் சொரிந்தவா
தேன்சொரிந்த வாசமுல்லைப் பூ உதிர்ந்ததோ
உந்தன் துக்கம் எங்கள் நெஞ்சில் ரத்தம் சொட்டுது
ரத்தம் சொட்டும் துக்கம் நீல வானை முட்டுது"

அன்புடையீர்!

எமது குடும்பவிளக்கு அமரர் கணபதிப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*மத்தொனி,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.* (C/37069)

-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா வல்லிபுரம்

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் சிக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வல்லிபுரம் நேற்று (22.03.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னு தம்பதியினரின் மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் புஸ்பராணி, செல்வராணி (இந்தியா), இன்பராணி (டென்மார்க்), தேவராணி, விமலதாஸ், விமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற கிருஸ்ணானந்தன் மற்றும் இராசையா (இந்தியா), தனபாலு (டென்மார்க்), அருளானந்தம், பவளராணி, மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராயிலுள்ள இல்லத்தில் இன்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (15891)

தகவல்:
மனைவி,
விமலதாஸ் (மகன்).

## திருமதி கந்தையா பொன்னு

காரைநகர் கிழக்கு, களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பொன்னு நேற்று (22.03.2003) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகமுத்துவின் சிரேஷ்ட புத்திரியும் நாகமணி (சோதிடர், நியூசிலாந்து), காலஞ்சென்ற அம்பலம் (மலேஷியா) மற்றும் பாலசிங்கம் (முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர், திட்ட அமுலாக்கல் அமைச்சு, கொழும்பு), சிவலிங்கம் (கிராம உத்தியோகத்தர், காரைநகர் மத்தி - J/48) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமணிதேவி (நியூசிலாந்து), புகனேஸ்வரி (மலேஷியா), மல்லிகா, மங்களம் ஆகியோரின் அருமை மாமியாரும் குணதீசன் - ஜொய்சி (நியூசிலாந்து), ஜெயதீசன் - இரத்தினேஸ்வரி (மாலா, லண்டன்), தாமரைச்செல்வி (மருத்துவபீடம், ரஷ்யா), சந்தானச்செல்வி, ஸ்ரீநிவாசன் (நியூஸிலாந்து), சிவமாலதி (உயர்தரம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சிவசங்கர் (உரிமையாளர், காரை - துரித காகிதாதிகள் சேவைகள், காரைநகர்), செந்தூரன் (உயர்தரம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), விக்கினேஸ்வரன் (நியூஸிலாந்து), சிவவேணி (மாணவி, யா/கலாநிதி ஆ.தி.ம.ம.வித்தியாலயம், காரைநகர்), மலையரசி (மாணவி, மலேஷியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டினேஸ், சோனியா (நியூஸிலாந்து), ஜான்சிராணி, மிதுஷ் (லண்டன்) ஆகியோரின் அருமைப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிவகாமன் (சுழிபுரம் மேற்கு), காலஞ்சென்ற கந்தையா மற்றும் தெய்வானை (மூளாய்), காலஞ்சென்றவர்களான நாகமுத்து, இலட்சுமி (அழகாபுரி, காரைநகர்) மற்றும் பரமு, பாலயோகம் ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியான் வீதி, சுழிபுரம் மேற்கில் நடைபெற்றுப் பூதவுடல் காரைநகர் கிழக்கு, களபூமி, திக்கரை மயானத்தில் பி.ப. 3 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் மேற்கு.*

தகவல்:
எஸ்.கே.பாலசிங்கம்,
எஸ்.கே.சிவலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், காரைநகர்) (பிள்ளைகள்).

(15885)

## கந்தசாமி சுஜிந்தன்

புத்தூர் கிழக்கு, குருநாதர் கோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி சுஜிந்தன் நேற்று (22.03.03) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தசாமி (வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி) - தவமணி தம்பதிகளின் செல்வப் புதல்வனும் சுதர்சன் (லண்டன்), சுஜிதா, சுரதீபன், சுஜீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிஐயா - ராசம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும் நகுலேஸ்வரன் - மாலா (ஜேர்மனி), பொன்னம்மா, சின்னம்மா ஆகியோரது மருமகனும் விரகத்தி, தம்பிராசா ஆகியோரது பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3 ஆம் வட்டாரம்,*
*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.* (15884)

தகவல்:
M.கந்தசாமி (தந்தை)
(வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி)

### வவுனியா மாவட்டத்தில்

# படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 13 கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்வர்

## அரச அதிபர் கணேஷ் தகவல்

வவுனியா,மார்ச்23

வவுனியா மாவட்டத்தில் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 13 கிராமங்களில் அடுத்த மாத முற் பகுதிக்குள் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில நேற்று நடைபெற்ற உயர்மட்ட அதி காரிகளுடனான சந்திப்பிலேயே அவா இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அரச அதிபர் மேலும தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத் தின் பலாபலனை மக்கள் உண்மை யாக அனுபவிக்க வேண்டுமானால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனை வரும் அவர்களது சொந்த இடங்க ளில் மீளக் குடியமர்த்தப்படவேண்டும். அதன்மூலமே தற்போது காணப்படும் சமாதானச் சூழலை எவ்வித தடங்கல் களும் இன்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் - என்றார்.

இந்த உயர் மட்டச் சந்திப்பில் இராணுவம், பொலீஸ், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள், திணைக் களத் தலைவர்கள், கிராம அலுவலர் கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை-வவுனியா-ஓமந்தை, தாண்டிக்குளம் வரையான 7 கிராமங் களிலும், செட்டிக்குளம் பிரதேச செய லர் பிரிவிலுள்ள 6 கிராமங்களிலும் தற்போது கண்ணிவெடிகள் அகற்றப் பட்டுள்ளன என்றும் -

அப்பகுதிகளில் மக்கள் விரைவில் மீளக்குடியமரமுடியும் என்றும் -

கலந்துரையாடலில் கலந்து கொண்ட படைத்தரப்பினர் தெரிவித் தனர்.

(எ-5-164)

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்களினதும், யாழ்மாநகர மக்களினதும் குடியியல் உரிமைகளுக்கு பாதகமாக அமை யப்போகும் அரசின் இந்த நடவடிக் கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை கள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது.

இதேவேளை -

யாழ்.மாநகர சபைக்குச் சொந்த மான சில காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்க வசதியாக அவற்றை தம்மிடம் கையளிக்குமாறு அரசாங்கம் மாநகர சபை நிர்வாகத் துக்கு விடுத்துள்ள பணிப்புரை கண் டனத்துக்குரியதெனவும் - ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை ஒன்று பதவியில் இல்லாதபோது அரசும் வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகமும் இணைந்து மேற் கொள்ளும் இந்நடவடிக்கை கண்டிக் கப்படவேண்டியதெனவும் - முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.(ஐ-8-17)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் கிட்டியுள்ளது. இந்தப் பிரதேசங் களில் தேர்தல்கள் விரைவில் நடத் தப்பட்டு ஜனநாயக வழியில் அந்தப் பிரதேச மக்கள் தமது பணிகளை மேற்கொள்ள முடியும்.- என்றார் அவர்.

இதேவேளை - இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கு ஏற்கனவே வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் தேர்தலைநடத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதற்கிடையில் - புதிதாக வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தேர்தல் நடத் தப்பட வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்புக் கோரிவருகின்றது. இதற்கு அரசும் இணக்கம் தெரிவித் துள்ளது.

தேர்தல் சட்டம் திருத்தப்பட்டு புதிதாக வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, தேர்தல் நடத்தப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப் பட்டது.

(எ-3)

# ஈராக்கிய நகரங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் ஈராக்கின் இரண் டாவது பெரிய நகரமான பஸ்ராவை யும் தாம் கைப்பற்றியுள்ளதாக கூட் டுப்படைகள் தெரிவித்தன. ஆனால், அங்கு கடும் சண்டைகள் தொடர்ந்து வருவதாகவும் ஈராக்கியப் படைகள் தொடர்ந்து போரிட்டு வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. 13 லட்சம் மக்கள் வாழும் பஸ்ரா நக ரம் பக்தாத் நகருக்கு அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும்.

இந்தத் தாக்குதலில் தெற்கு ஈராக் கிய படைகளின் 51ஆவது 'டிவிஷன்' கட்டளைத் தளபதியும் அவரது படைப் பிரிவில் இருந்த 8ஆயிரம் படையினரும சரணடைந்துள்ளதாக பென்ரகன் தெரிவித்தது. சண்டை ஆரம்பித்த பின்னர் இவ்வளவு பெரிய எண்ணிக் கையில் ஈராக்கிய படையினர் சரண டைந்திருப்பது இதுவே முதற்றடவை.

ஆனால், ஈராக்கியப் படையினர் எவரும் சரணடையவில்லை என்றும் அமெரிக்கப் படைகளை எதிர்த்து அவர் கள் தீரமுடன் போரிட்டு வருவதாக வும் ஈராக்கிய அமைச்சர் ஒருவர் கூறி னார்.

தொடர்ச்சியாக நடைபெறும் தாக்குதல்களில் 15பேர் கொல்லப் பட்டதாகவும் 200இற்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்ததாகவும் ஈராக் கிய அதிகாரிகள் கூறினர். காயம டைந்தவர்களில் 85 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பொதுமக்கள் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரி வித்தன.

தலைநகர் பக்தாத் மீது நான்கா வது இரவாக கூட்டுப் படைகளின் விமானங்கள் கடும் தொடர் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வரு கின்றன. இதனால் நகரம் தீப்பிழம் பாகக் காட்சி அளிக்கின்றது. பெரும் எண்ணிக்கையான ஈராக்கியர்கள் இடம் பெயர்ந்து, உயிரைக் காத்துக்கொள்ள வடக்கு ஈராக் நோக்கி நகர்ந்து கொண்டி ருக்கிறார்கள்.

ஈராக் மீது தற்போது நடத்தப்பட் டுவரும் தாக்குதல் இதுவரையான வரலாற்றில் காணப்படாத ஒன்று என்று ஈராக் தாக்குதலுக்கு தலைமை தாங் கும் அமெரிக்க ஜெனரல் டொம்மி பிராங் தெரிவித்தார்.

வேறு முக்கிய நகர்வுகள்:

☆ ஈராக்கின் வடக்குப் பகுதிக் குள் துருக்கியக் கொமாண்டோப் படையினர் ஊடுருவி இருக்கிறார்கள் என்று வெளியான செய்திகளை துருக்கிய அரசு மறுத்துள்ளது.

☆ ஈரானுடனான எல்லைக்கு நெருக்கமான பகுதிகளை இலக்கு வைத்தும் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

☆ எந்த வன்முறைகளுக்குள் ளும் சிக்கிக் கொள்ளாமல் இருப்ப தற்காக 4 லட்சத்து 50 ஆயிரம் ஈராக்கி யர்கள் வடக்கு ஈராக்கிய நகர்களில் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா. அதி காரிகள் தெரிவித்தனர்.

☆ உலகின் பல பகுதிகளில் போருக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

☆ போர் ஆரம்பித்த பின்னர் முதன் முதலாகக் கருத்து வெளியிட்ட பாப் பரசர் ஜோன் போல், இந்த யுத்தம் மனித குலத்துக்கு அச்சுறுத்தலானது என்று கூறினார்.

☆ பிரிட்டிஷ் செய்தி அமைப்பான ஐ.ரி.என் நிறுவனத்தின் செய்தியா ளர் ஒருவரும் ஒளிப்பதிவாளர் ஒரு வரும் மொழி பெயர்ப்பாளர், கடும் சண்டை நடைபெற்ற தெற்கு ஈராக் கியப் பகுதியில் காணாமற்போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

☆ வடக்கு ஈராக்கில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒரு வர் கொல்லப்பட்டார்.

☆ தமது எல்லைப் பகுதியில் அமெரிக்காவின் ஏவுகணைகள் வீழ்ந்து வெடிப்பதாகவும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் தொடர்ந்தும் தமது நாட்டின் வான் வெளி இறைமையை மீறி வருவதாக ஈரானிய அதிகாரிகள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

☆ ஈராக்கிய அதிபர் சதாமும் அவரது இளையமகன் உதய்யும் பாது காப்புத் தொடர்பான விவாதம் ஒன்றை நடத்திக் கொண்டிருப்பதை ஈராக்கியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. (ம)

## நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வருகைதந்த அந்த அமைப்பின் பிரதி நிதிகள் அவர்களுடன் குடாநாட்டு நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

நகரத்தின் கேந்திர முக்கியத்துவம வாய்ந்த பகுதியாக விளங்கும் மாநகர சபை வளாகத்தில் படை முகாம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சான்று பகரும் கட்டடங்கள் மற்றும் கல்லூரிகள் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் படைமுகாம் அமை வது மக்களுக்கு அச்சுறுத்தலான செயலாகும்.

இந்தப் பிரதேசம் ஊடாக ஏ - 9 வீதி செல்வதால், பொதுமக்கள் போக்கு வரத்தும பாதிக்கப்படும். எனவே இந்தப் பிரதேசத்தில் படைமுகாம் அமையக் கூடாது - என்று இணையப் பிரதிநிதி கள் எடுத்துக் கூறினர்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்தும் இணையப் பிரதிநிதிகள் விளக்கினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச் சாத்தாகி ஓராண்டு பூர்த்தியடைந்த போ தும் மக்களின் இயல்புநிலை இன்ன மும் சீரடையவில்லை என்றும் பிரதிநிதி கள் எடுத்துக் கூறினர்.

தற்சமயம் முன்னெடுக்கப்படும் சமா தான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன் னேற்றம் குறித்து திருப்தி தெரிவித் துள்ள பொதுநலவாய அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த முயற்சிகள் நீடிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை முடித்துக்கொண்டு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கமும் அடேல் பாலசிங்கமும் லண்டன் புறப்பட்டனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு சிறப்புத் தளபதி கருணா மற்றும் உதவியாளர் கள் ஆகியோர் ஹிரோஷிமா நகரத்தை நேற்று பார்வையிட்டனர்.

நாளை அவர்கள் வன்னி திரும்ப விருக்கின்றனர். (ம-3)

# யாழ்.ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்தனர். இதனை அடுத்து மோதலில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் - இச்சம்பவம் காரணமாக பீதி கொண்ட சிலர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து யாழ் நகரில் உள்ள வின்சர் தியேட்டர் உட்பட பொது இடங்களில் தமது இரவுப் பொழுதைக் கழித்த தைக் காணமுடிந்தது.

கத்தி, கோடரி மற்றும் வாள் போன்ற கூரிய ஆயுதங்களை மோதலில் ஈடு பட்டோர் பயன்படுத்தியதாகச் சொல் லப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந் தவர்களில் 8 பேர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

ந.சற்குணராசா (வயது 40), முகம் மது ரஜீவ் (வயது 54), எஸ்.ஆப்தீன் (வயது 45), காலத்தீன் (வயது 45), யூன்லோயா (வயது 40), ஏ.ஜி.எம்.நிர் பான் (வயது 32), நஜப்தீன் (வயது 55), என்.எம்.முஹம்மட் ஹஜி (வயது48).

மோதலுக்கான காரணம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன.

(எ-5-12)




மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு

தொலைத் தொடர்பு நிலையங்கள், வீடுகள், அலுவலகங்கள், பக்ஸ், கோட்லெஸ் போன்றவற்றுக்கு பாவிக்கக்கூடிய முறையில் தொலைபேசிகள், இணைப்புக்கள் உடன் பெற்றுத்தரப்படும்.



எங்கும் இணைப்பு தரப்படும்.

T.P. 071 399220 0777 242416

உங்கள் தொடர்புகளுக்கு:

பவர் செலுலர்

(வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)

இல.185, கஸ்தூரியார் வீதி, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்.

(15540)



வீடு உடன் விற்பனைக்கு

உரும்பிராய், கற்பகப் பிள்ளையார் ஆலய வீதியில், சைவத் தமிழ் வித்தியாலயத்துக்கு முன்புறமாக 4 பரப்பில் அமைந்த இரண்டு அடுக்கு மாடி வீடு (6 அறைகளுடன்) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

T.P. : 222 3837

(C/37072)





குறைந்த விலையில் நிறைந்த தரத்தில் வீட்டுத் தேவைகளுக்குரிய சகல விதமான தளபாடங்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏசியன் வீட்டுத் தளபாடம்

Dealer in Furniture Matters and Plastick Items

(பஸ் நிலையம் அருகாமை)

இல:133, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்.

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'அதிர்ச்சியும் ஆச்சரியமும்' தாக்குதலால் பக்தாத்தில் பேரழிவு!

பக்தாத்,மார்ச்23

ஈராக் தலைநகர் மீது வெள்ளிக்கிழமை தொடக்கம் அமெரிக்கா நடத்தி வரும் 'அதிர்ச்சியும் ஆச்சரியமும்' **(Shock and Awe)** தாக்குதலினால் அங்கு பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. நகரின் பல பகுதிகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன கரும்புகையும் சாம்பரம் நகரை மூடிப்பரவியிருக்கின்றது.

இந்தத் தாக்குதல் திட்டத்தின்படி ஆயிரத்து 500 குண்டுகள் மற்றும் ஏவுகணைகளை பக்தாத் மீது 24 மணி நேரத்துக்குள் வீச பென்ரகன் திட்டமிட்டிருந்தது.


முதற்கட்டத் தாக்குதலில் 320 குருஸ் ஏவுகணைகள் வீசப்பட்டன என்று பக்தாத்தில் உள்ள பி.பி.ஸி. நிருபர் கூறுகின்றார்.

வெள்ளிக்கிழமை இரவு முழுவதும், சனிக்கிழமை காலையிலும் குண்டு மழை தீவிரமடைந்தது.

அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் அலை அலையாகப் பறந்து வந்து குண்டுகளைப் பொழிந்தன.

பக்தாத்தில் உள்ள அதிபர் மாளிகையும் சுற்றியுள்ள கட்டடங்களும் எரிந்து கொண்டிருக்கின்றன.

எண்ணெய்க் கிணறுகள் பல எரிந்து கொண்டிருப்பதால் வானம் பிரகாசமாகக் காட்சியளிக்கிறது. குண்டுகளும், றொக்கட்டுகளும் வெடிக்கும் காட்சி வாண வேடிக்கை போன்று தெரிவதாக செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.



தாக்குதல் தொடுக்க தயாராகும் அமெரிக்க விமானப் படையினர்.



ஈராக்கினுள் பிரவேசித்த அமெரிக்க படைகள் 'உம்குஸர்' துறைமுகநகரின் நுழைவாயிலில் ஈராக் கொடியை அகற்றி விட்டு அமெரிக்கக் கொடியை ஏற்றும் காட்சி

## வளைகுடா கடலுக்கு மேலே பறந்த பிரிட்டிஷ் ஹெலிகள் மோதி சிதறின

### ஏழு படையினர் பலி!



வாஷிங்டன்,மார்ச்23

பிரிட்டனின் றோயல் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு ஹெலிக்கொப்டர்கள் நேற்று வளைகுடாக் கடற்பகுதிக்கு மேலே நடுவானில் மோதி நொறுங்கின. அவற்றில் இருந்த ஏழு விமானப் படையினர் உயிரிழந்தனர்.

'கடல் அரசன் (Sea King) என அழைக்கப்படும் இந்தக் ஹெலிக்கொப்டர்கள் எவ்வாறு மோதின என்பது தெரியவில்லை. எனினும், தாக்குதலுக்கு அவை இலக்காகவில்லை என்று பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிற்கு எதிரான போர் நடவடிக்கையில் பிரிட்டிஷ் படைகள் சந்தித்த மோசமான இழப்பு இது என்று கூறப்படுகிறது.

மோதிச் சிதறிய இரண்டு ஹெலிகளிலும் இருந்த படையினர் காணாமற்போனதாக முதலில் தெரிவிக்கப்பட்டபோதும் அவர்கள் உயிரிழந்துவிட்டதாக பின்னர் உறுதிசெய்யப்பட்டது. (ஐ)

## ஆக்கிரமிப்பை முறியடிக்க தற்கொலைத் தாக்குதல்கள்

### சதாமின் புதல்வர் அறைகூவல்

அமெரிக்க படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட தியாகிகளாக மாறி உயிர் துறக்க தயாராக வேண்டும் என்று ஈராக் தற்கொலைப் படையினருக்கு அதிபர் சதாம் ஹுசையனின் மூத்த மகன் உதேய் அழைப்பு விடுத்துள்ளார்.

'ஈராக் நமதே' என்ற ஆதரவு கோஷத்தை இந்நாளில் பெண்கள் எழுப்பவேண்டும். அதை வெற்றி வீரர்கள் மூலமாகவோ அல்லது நன்றியுள்ள தியாகிகள் மூலமாகவோ அடையவேண்டும்.

ஈராக்கைக் காப்பாற்ற நீங்கள் கடவுளிடம் உறுதிமொழி அளித்துள்ளீர்கள். அதனைக் காப்பாற்ற தங்களது இன்னுயிரைக் கொடுத்தாவது நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று உதேய் சதாம் தனது நாட்டு வீரர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.


## ஈராக் விமானத் தளங்களை கைப்பற்றியது கூட்டணிப்படை

வாஷிங்ரன்,மார்ச்23

மேற்கு ஈராக் பகுதியில் உள்ள முக்கிய விமானத் தளங்களை அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின.

பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் இதைத் தெரிவித்தன.

எச்2, எச்3 ஆகிய தளங்களை ஈராக் படைகளின் எதிர்ப்பை எளிதில் முறியடித்து தம் வசம் கொண்டு வந்தன கூட்டணிப் படைகள். இந்தத தளங்களில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைய்ன் ஸ்கட் ரக ஏவுகணைகளை பதுக்கி வைத்துள்ளதாகக் கருதப்படுகிறது. (ஐ)



ஈராக் எல்லை அருகே தனது ஆட்லறிகளை நகர்த்தியிருக்கிறது துருக்கி. போரில் இணைந்து கொள்வதற்காக ஆயிரக்கணக்கான துருக்கி நாட்டு துருப்புகள் எல்லை தாண்டி ஈராக்கினுள் நுழைந்துள்ளன.


எல்லையில் அணி வகுத்து நிறுத்தப்பட்டிருக்கும் ஆட்லறிகளையே படத்தில் காண்கிறீர்கள். (ஐ)

## ஈராக் படைகளுடன் அமெரிக்கா பேச்சு

வாஷிங்ரன்,மார்ச்23

பெரியதொரு போரைத் தவிர்க்க ஈராக் படைகளுடன் நேரடிப் பேச்சு நடத்தி வருவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

இதனிடையே, நூற்றுக்கணக்கான ஈராக் வீரர்கள் சரணடைந்துள்ளதாகவும் அவர்களை போர்க் கைதிகளாக அமெரிக்க, பிரிட்டிஷ் படை வீரர்கள் பிடித்து வைத்துள்ளதாகவும் பிரிட்டிஷ் இராணுவ தளபதி அட்மிரல் மைக்கேல் பாய்ஸ் லண்டனில் தெரிவித்தார். (ஐ)



வளைகுடா பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்காவின் கிட்டிஹாக் கப்பலில் 1000 இறாத்தல் எடை கொண்ட குண்டுகளை நகர்த்திச் செல்லும் வீரர்கள்.



தாக்குதல் திட்டம் பற்றி அமெரிக்காவின் 'யு.எஸ்.எஸ். ஆபிரஹாம் லிங்கன்' கப்பல் வீரர்களிடையே உரையாற்றுகிறார் கப்பலின் தளபதி.



ஈராக்கியர்களுக்காக தொழுகையில் ஈடுபடும் பங்களாதேஷ் முஸ்லிம்கள் அதிபர் புஷ்ஷின் கேலிச் சித்திரம் ஒன்றை வைத்திருப்பதை படத்தில் காணலாம். அமெரிக்காவின் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பங்களாதேஷ் முழுவதும் அரைநாள் வேலைநிறுத்தம் இடம்பெற்றது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள மோட்டோ றோலா சோலருடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கா.கனகசிங்கம், புத்தூர்ச் சந்தி, புத்தூர். (15831)

பிலிப்ஸ்ரக ஆண்களுக்கான (5கியர்) துவிச்சக்கர வண்டியும் பாவ னையில் உள்ள **Yamaha**-50 மோட் டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கிழமை நாள்களில் 4 மணிக்கு பின் னர் தொடர்புகொள்ளவும். முகவரி: T.பாலசுப்பிரமணியம் ஜெயஸ்தான், தாளையடி ஒழுங்கை, திருநெல் வேலி. (15798)

யமுனாபாரி செவி ஆடு (குட்டித் தாச்சி) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.நடராசா, No.3, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப் பாணம். (15867)

**KORS Offset Printing Machine very good working condition for sale contact: N.** சந்திரசேகரம், 825/5, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 15, **T.P.: - 01-526597.** (சி-37041)

இல.35, மூத்த விநாயகர் வீதியி லுள்ள 1½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சொல் வேந்தன், 77, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (15837)

கோப்பாய், பருத்தித்துறை யாழ். வீதி 5ஆம் மைல் கல் அருகில் பழைய **Glaxy** கண்ணாடித் தொழிற் சாலை ஒழுங்கையில், மகாவளவு 14 பரப்புகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். சங்கரலிங்கம், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. (37053)

40 நாள் நிரம்பிய நல்லின கிரேடன் **(Gretdarn)** நாய்க்குட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலா, 88/15, பத்திரகாளி கோயிலடி, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி (நாச்சிமார் கோவிலடி), யாழ்ப் பாணம். T.P.: 0777 -110131 (15843)

காவலுக்குரிய நல்ல இன அல்சே சன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.கீத்தனா, டச்சுறோட், உடுவில். (15855)

**Prima, Broiler** மற்றும் இறைச் சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவை யான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ள லாம். (**Electronic** நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் அளவு), முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (15588)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ என்பன சுத்தம்செய்து தினமும் பெற் றுக்கொள்ளலாம். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலே னியம் பார் முன்பாக). (15847)

## வீடு விற்பனைக்கு

யாழ்.மானிப்பாய் வீதியில் இருந்து 100யார் தூரத்தில் இணுவில் வீதியில 3பரப்பில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.பாலேந்திரன், இணுவில் வீதி, மானிப்பாய். T.P.:0777-739141. (15772)

## தவறிவிட்டது

சண்முகலிங்கம் மணிமேகலா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.725063873V), விசேட அடையாள அட்டை (0901014862) என்பன 19-03-2003 அன்று யாழ்ப் பாணத்திற்கும் முகமாலைக்கும் இடை யில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். K.சண்முகலிங்கம், 264, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் கோயில் முன் பாக). (15816)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த தங்கராசா சரோசாதேவி என்பவரு டைய தேசிய அடையாள அட்டை (இல.627542861V) 10-03-2003 அன்று யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில ஒப்படைத்துதவவும். த.சரோசாதேவி, பெரியதம்பிரான் கோயிலடி, அச்சு வேலி தெற்கு, அச்சுவேலி. (15826)

யோ.தெய்வேந்திரன் என்பவ ருடைய மோட்டார் சைக்கிள் ஆவ ணங்கள், வங்கி புத்தகங்கள் என் பன யாழ்.செயலகத்திற்கும் ஆரியா லைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி. T.P.: 070 - 213282. (15835)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில், இருபாலை வீதி யில் அமைந்துள்ள பழனி முருகன் கோயிலுக்கு முன் ஒழுங்கையில் 10 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: திரு.அ.குணரத்தினம், பளவளவு, ஏழாலை மேற்கு, ஏழாலை.(15760)

நீர்வேலி வடக்கு, பெரியபுலம், சிறுப்பிட்டியில் 8½ பரப்புக் காணி உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி யோசவ், இல.859/26, ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (15857)

## மணமகன் தேவை

கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த, திருவோண நட்சத்திரம், 28.02.1965ஆம் ஆண்டு, கிரகபாவம் 19 உடைய மணமகளுக்கு அர சாங்க அல்லது தனியார் துறையில் தொழில்புரியும் மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1822, மே/பா உதயன். (15821)

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1969இல் மிருகசீரிடத்தில் பிறந்த, செவ்வாய்க் குற்றமுள்ள, பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1824, C/o உதயன். (15865)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 30 வயது, சைவபோச னம், உத்தராடம், 2இல் செவ்வாய் உள்ள, **U.K**யில் **Phd. Engineer** மணமகனுக்கு மணப்பெண் தேவை. ஜாதகம், படத்துடனும் தொடர்பு கொள்ளவும் (பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும்). தொடர்பு: விள.இல.1823,மே/பா.உதயன்.(15860)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாக நட்சத்திரம், 1972 இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமை உள்ள மண மகனுக்கு அழகிய, 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்புகள், புகைப்படங்களுடன் தொடர்புகொள்ள வும். ப.கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்ச கம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
**T.P.: 2789.** (15664)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, செவ்வாய் குற்றமற்ற, உத்தரம் 2ஆம் பாதமும் 16 கிரகபாவமும் உடைய, சுவிஸில் பிரஜாவுரிமை பெற்ற மகனுக்கு பெற றோர் கல்வியறிவும் அழகும் உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். படத் துடனும், ஜாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். ஆ.சி.ஆழ்வாப்பிள்ளை (மனேஜர்), பெரியதெனி, வியாபாரி மூலை, பருத்தித்துறை. (15746)

## விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில் ஆடியபாதம் வீதிக்குத் தென்புறமாக (கொக்குவில் கிழக்கு) 3 பரப்பு குழி 15.15 வீடுகட்டக்கூடிய காணி விற் பனைக்குண்டு.

தொடர்பு:- T.P.-01-589238

மு.குறிப்பு:- தரகர் வேண்டாம்.

(சி-37033)

## துயர் பகிர்கின்றோம்

இலங்கை வங்கியின் எமது கிளை முகாமையாளர்
திரு. C.K.சிவபாலன் அவர்களின் பாசமிகு சகோதரன்


### கந்தையா சிவதாசன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் எமது ஆழ்ந்த துயரினைப் பகிர்ந்துகொள்வதோடு, அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- ஊழியர்கள்
இலங்கை வங்கி,
காங்கேசன்துறை (மல்லாகம்).

(15864)


## அமிர்தாஞ்சன்




அமிர்தாஞ்சன் 100 ஆண்டுகளுக்கு மேலாக அனைவரது நம்பிக்கையையும் பெற்றுள்ள பெயர். அமிர்தாஞ்சன் பெயின் பாம், அமிர்தாஞ்சன் ஸ்ட்ராங் ஆகியவை அதன் தயாரிப்புகளில் அடங்கும். இவை பலவிதமான வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றது.

இறக்குமதியாளர்கள்

தொ.பே: 739899, 715700


## இதயத்தின் ஆழத்தில் எழும் உணர்வலைகள்

மூன்றாம் ஆண்டு



முதலாம் ஆண்டு



**அமரர் தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி, முன்னாள் பிரதம கணக்காளர், ஸ்ரீலங்கா புத்தகசாலை)

**திருமதி பாலசுப்பிரமணியம் மனோன்மணி**

20-03-1925 ← அன்னை மடியில் → 25-03-1932
21-04-2000 ← ஆண்டவன் அடியில் → 03-04-2002

பாசத்தின் வித்துக்களாய் பண்பின் உறைவிடங்களாய் பார்போற்றும் உத்தமராய் வாழ்ந்த எமது அன்புத் தெய்வங்களே! கண்ணை இமை காப்பது போல எமைக் காத்து எங்கள் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தியாகதீபமாய் இருந்து தங்களையே அர்ப்பணித்து ஒளியூட்டிய எங்கள் ஆருயிர் தெய்வங்களே! காலமெல்லாம் உங்கள் நினைவில் வாழ்ந்திடுவோம் இப்பாரினிலே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(C/37062)

'பாலவாசம்'
185/4, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கூத்து, கான நாடகம், பள்ளு

**'சாந்திக்கூத்து' வகைகளுள் ஒன்றாக வளர்ச்சியடைந்தது நாடகம். கான நாடகத்தில் பாத்திரத்துக்கு ஏற்ப இசைக் கருவி மீட்கப்படும். இஸ்லாமிய தமிழ் நாடகங்கள் இசைப் பாடல்கள் நிறைந்தவை. தமிழ்நாட்டில் மிகப் பரவலாக புழக்கத்தில் இருந்த உழவர்களின் இசைநாடகம் பள்ளு.**

'நாடகம்' தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது. எனினும், 'சாநதிக் கூத்து' வகைகளுள் ஒன்றாக வளர்ச்சியடைந்த நாடகம் தொலகாப்பியத்தில் குறிக்கப்படவில்லை. பாண்டிய மன்னர்கள் கோயில்களில் இசை, நாடகம், நாட்டியம் போன்ற கலைகளை நடத்தி வந்தனர்.

'கூத்து' என்று அழைக்கப்பட்ட நாடகங்களும் பாண்டிய நாட்டில் திருநெல்வேலிக்குச் சமீபமாய் உள்ள ஆத்தூரில் உள்ள கோயிலில் ஆவணித் திருநாளன்று நடைபெற்றன.

சோழ மன்னர்கள் இசை, நாடகம், நாட்டியம் போன்ற துறைகளைச் சேர்ந்த கலைஞர்களைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். பல இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் இம்மன்னர்களின் ஆதரவு பெற்று நடைபெற்றன.

தமிழில் 'இசை நாடகம்' என்றால் 'ஸங்கீதரூபகம்,' 'கான நாடகம்' எனப்படும். இசை நாடகங்களில் நடிப்பவர்கள் கச்சேரியில் மாத்திரம் குறிப்பிட்ட ஆடை உடுக்க முடியும். தென்னிந்தியாவில் இசை நாடகங்களை இயற்றியவர்கள் பிரபல்யமான வாக்கேயக்காரர்கள். இவர்கள் சரித்திரங்களை இசை நாடகமாக இயற்றியுள்ளனர். இத்தகைய நாடகங்களில் இசைக் கருவிகள் வாசிக்கும் போது அந்தந்தப் பாத்திரத்திற்கு ஏற்றவாறு வாசிக்கவேண்டும்.

இஸ்லாமியத் தமிழ் நாடக ஆசிரியர்கள் பலர் உள்ளனர். அவர்கள் இயற்றிய நாடகங்களில் மிக முக்கியமாகக் கூத்து அமைப்பிலுள்ள 'தைபார் சுல்தான் நாடகம்', 'அலிபாதுஷா நாடகம்', 'அபாசு நாடகம்', 'லால் கௌஹர் நாடகம்' இவை அனைத்தும் அக்கால நாடக மரபுக்கு இணங்க இசைப் பாடல்கள் நிறைந்தவை.

கூத்து அமைப்பில் பல கிறிஸ்தவ நாடகங்கள், இசைப் பாடல்கள் நிரம்ப எழுதப் பெற்றுள்ளன. இவற்றில் முக்கியமானவை அந் தோனிமுத்துவால் எழுதப்பெற்ற 'ஞான சௌந்தரியம்மாள்' நாடக அலங்காரம், மாயதாஸன் எழுதிய 'ஊதாரிப்பிள்ளை விலாசம்', சேவியக்குருகு யாத்த 'ஞானசவுந்தரியம்மன்' நாடகம், இராஜேந்திரம்பிள்ளை உருவாக்கிய 'ஆதாம் ஏவாள் விலாசம்', பி.எஸ்.பீற்றர் ஆக்கிய 'நல்ல சமாரித்தன் உவமை', யாக்கோபு சாமுவேல் என்பவர் எழுதியுள்ள 'ஆதாம் ஏவாளின் விலாசம்' இவை அனைத்தும் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

பள்ளு என்பது இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் மிகப் பரவலாகப் புழக்கத்திலிருந்த உழவர்களின் இசை நாடகம். முழுவதும் இது இசைப் பாடலாக்கப்பட்டது. பாடல்கள் மககள் முன்பு பாடப்பட்டு அவற்றுக்குத்தக்கவாறு நடித்துக் காட்டபபடும். கர்நாடக இசை தமிழ் நாட்டில் புகழ்பெற்றபின் இவை பாடப் பெற்றுள்ளதனால் பாடலிசையமைப்பு அதன்படி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் மக்கள் நடித்துள்ள நாடகங்களில் ஒன்றாகக் 'குளுவ நாடகம்' விளங்குகிறது. இதேபோன்ற நாடகமாக வெளிவந்தவை ஐந்தாகும்.

கர்நாடக இசை வளர்ச்சியடைந்த பின் இந்நாடகம் உருவாகியதால் இவற்றில் கர்நாடக இசை ராகங்களும், தாளங்களும் கையாளப்பட்டுள்ளன. இந்நாடகங்களில் 'சின்னமகியன் குளுவ நாடகம்', 'கோட்டூர் குளுவ நாடகம்' ஆகியன இசைநயம் செறிந்தவை.

'நொண்டி நாடகம்' ஒரு நடிகரால் ஆடிப்பாடி மக்களை இன்புறச்செய்

## அனைத்துக்கும் அடிப்படை இசை

வதாகும். இது நொண்டிச் சிந்துப் பாடல்களைப் பெருமையாகக் கொண்ட நாடக இசைக் கலையாக விளங்குகிறது. நாடகம் முழுமையும் இசைப் பாடல்களாகப் பாடப்பட்டன. 'மகுடி நாடகம்' தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் நடிக்கப் பெற்றதாகத் தெரிகிறது. இந்த நாடகங்களில் கர்நாடக இசையின் தாக்கம் தெரிகிறது.

ஒரு வரலாற்றைக் கீர்த்தனைகளினால் நாடகத்தன்மை விளங்க எழுதுவதை 'நாடகக் கீர்த்தனைகள்' என்று கூறலாம். கீர்த்தனைகளை மிகுதியாகக் கொண்டு நாடக இயல்புகளுடன் எழுதப்படும் நிகழ்ச்சிகளின் தொடரான நாடகக் கீர்த்தனைகள் தமிழ் மொழியில் ஓர் இலக்கிய இனமாகப் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் மக்களின் பேராதரவுடன் நன்கு விளங்கின.

கீர்த்தனங்களுடன் 'திபதை' என்ற ஈரடிக் கண்ணிகளால் அமைந்த இசைப் பாடல்களும் கதை விளக்கக் குறிப்புக்களான விருத்தங்களும் நாடகக் கீர்த்தனைகளில் இடம்பெறுவது மரபு. கீர்ததனைப் பாடல்களைத் 'தரு' என்று அழைப்பர். முதன் முதல 1714 இல் 'ஸ்ரீ பராங்குச நாடகம்' என்ற ஆழ்வார் நாடகத்தை கீர்த்தனைகளால் எழுதியுள்ளார். இதில் குறவஞ்சியின் தாக்கம் காணப்படுகின்றது.

1771இல் தன்னுடைய 60 வயதில் சீர்காழி அருணாசல கவிராயர் முதன் முதலில் எழுதிய 'இராம நாடகக் கீர்த்தனை' மிகுந்த புகழைப் பெற்றுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தைக் கைப்பற்றியது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோபாலகிருஷ்ண பாரதியவர்கள் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' என்பதை எழுதிப் புகழ் பெற்றார். இவர் இதுதவிர 'இயற்பகை நாயனார் சரித்திரம்', 'திருநீலகண்ட நாயனார் சரித்திரம்' ஆகியவற்றை நாடகக் கீர்த்தனைகளாக எழுதியுள்ளார்.

நாராயண கவி 'பாண்டியகேளீ விலாச நாடகம்' என்று ஒன்றை எழுதியுள்ளார். 1900ஆம் ஆண்டில 'பஞ்சலட்சணத் திருமுகவிலாசம்' என்பதை வில்லியப்பபிள்ளை என்பவர் எழுதியுள்ளார். இவற்றைத் தவிர மகா பாரதம் நாடகக் கீர்த்தனையாக எழுதப் பெற்றுள்ளது. திருவிளையாடல் புராணமும் இந்த அமைப்பில் எழுதப்பட்டுள்ளது.

**மு.கடம்பநாதன்**
**எம்.ஏ., இசை**

17ஆம் நூற்றாண்டில் சுமார் மூன்று நூற்றாண்டுகள் தமிழ்க் கலைவானில் சீருஞ் சிறப்புமாக இந்த குறவஞ்சி நாடகங்கள் தமிழர் இசைக்கு ஆற்றியுள்ள தொண்டு மிகப்பெரியது. இத்தகைய நாடகங்கள் மொத்தமாக 105 இயற்றப்பட்டன. இதில் சாஸ்திரிய இசையும் மெல்லிசையும் கலந்து வருகிறது. 'நவுக்கா சரித்திரம்' தியாகராஜருடைய பிரபல்யமான இசை நாடகங்களில் ஒன்றாகும். இதை இவர் இலகுவான மொழியில் இயற்றியுள்ளார். இந் நாடகத்தில் ஒருசில நாட்டுப்புற இசை அமைப்புக்களும் உள்ளன. ★



**யாழ்.திருமறைக் கலாமன்றத்தினரால் அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. இக்கூத்தில் இடம்பெற்ற கம்பன் தனது வீட்டுக்கு வந்த மன்னனுக்கு இராமாயணம் பாடிக் காண்பிக்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.**

# கலைக்கூடர்

தயாரிப்பு:-சத்தியன்

## பாலைவன ஓலம் பாரெங்கும் ஒலிக்குமா?

*மறுபடியும் ...*
*பாலைவனப் புழுதியது பச்சை இரத்தம் கேட்கிறது!*
*காலையிலே கண் விழித்தால் – கிழக்கில்*
*"குருேஸ்"தானே சென்று வாழ்வைக் கும்மிருட்டாயாக்கிறது!*
*குவைத்தின் எல்லையிலே – இன்னுமொரு*
*குவலயப் பிரளயமா? – மனுக்குலத்தின்*
*வரலாற்றில் மறக்கவொன்னா வடுவொன்று தோன்றிடுமா?*
*சாத்தான்கள் ஆடுகின்ற சதியாட்டப் போர்ச்சூதில்*
*சகுனிகள் யார்? தருமர்கள் யார்? – சச்சரவைப் புறந்தள்ளி*
*பகைகளாய்ச் சூழ்வோரை*
*பதற்றமுற்று உழல்வோரை...*
*பாருங்கள், எம்மைப்போல்*
*இன்னலினைத் தேடி இவ்வுலகில் இன்னொரு கூட்டம்!*
*செங்கடலின் அலைக்கரமே, செழுந்துருக்கி வான்வெளியே*
*பக்தாத்தில் மதர்ப்புடனே பரவிநிற்கும் அனற்காற்றே – தன்*
*சக்தித் திமிர்முற்றிச் சங்கெடுத்த "புஷ்" உறையும்*
*வெள்ளை மாளிகையின் வெண்சலவைக் கல்நிரலே!*
*உங்களிற் கேனுமிந்த ஓலம் கேட்கிறதா?*
*வரட்டுக் கௌரவமும் முரட்டுச் சித்தாந்தமும்*
*போரென்ற கொம்பதனால் பொருதட்டும் – முடிவினிலே*
*யுத்தத்தின் கறையுடனே யுகமொன்று பிறந்திருக்கும்!*
*அப்போது ...*
*இரத்தத்தில் குளித்தோர்க்கு – மானிடத்தின்*
*இரசனையெல்லாம் மறந்திருக்கும்!!*

**- அனலையூர்ச் சேந்தன் -**

## திரைப்பட விழாவில்....




யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவிருக்கும் 'சினி யாத்ரா' திரைப்பட விழாவில் முதல்நாள் காண்பிக்கப்படவுள் வெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 'நிதானய' (புதையல்) திரைப்படத்தின் கதைச்சுருக்க

இரவு வெகுநேரம் கடந்திருந்த வேளை நடுத்தர வயதுடைய ஒருவன் (வில் அபேநாயக்க) தனது படுக்கை அறையில் இருந்து தனது கடைசி பாவ ஒப்புகொள்ளலை எழுதிக்கொண்டிருந்தான். 'நான் உங்களுக்கு கதையொன்றை சொல்ல முயலவில்லை' அவன் சொல்கின்றான். மாறாக என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்வில் இருந்து விடுபெறுவதற்காகவே நான் இதை எழுதிக்கொண்டிருக்கிறேன். பாவ ஒப்புக்கொள்ளலின் முடிவில் அவன் தன்னையே கொலை செய்வதற்கு தீர்மானிக்கிறான். அவன் தன்னுடைய கடந்தகால வாழ்க்கையை மீட்டுப்பார்க்கும் போது அவன் எத்தகைய மனிதனாக இருந்திருந்தான் என்பதோடு, அவனைப் பிடித்தாட்டிய வேட்கை, அவனை ஆட்கொண்டிருந்த தீயசக்திகள் எவ்வாறு அழிவுக்கு இட்டுச்சென்றன என்பன பற்றியெல்லாம் எம்மால் யூகிக்கக்கூடியதாக உள்ளது.

இவற்றிற்கெல்லாம் காரணம் காட்டுப்பகுதியில் கற்பாறைக்குகையில் புதையல் இருப்பதாகக் கூறிய பல நூற்றாண்டுகளுக்கு முந்திய சுவடியை அவன் படித்ததே. யாராவது ஒருவர் நரபலி தருவதற்கு தயாராய் இருந்தால் அக்கற்பாறைக் குகையின் புதையல் எடுப்பதற்கான வழி திறபடும். அந்த ஓலைச் சுவடி பலிகொடுப்பதற்கான ஆளையும், இடத்தையும் மிக நுணுக்கமாக விவரித்திருந்தது. பலிகொடுக்கப்படவேண்டிய ஆள் ஓர் இளம் பெண்ணாக இருப்பதோடு, நாடி,கழுத்து ஆகியவற்றில் நிரையாக மச்சம் இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஓலையைப் படித்ததில் இருந்து அந்தப் பெண்ணையும் இடத்தையும் கண்டு அடையவேண்டுமென்பதே வில்லியினுடைய வாழ்க்கையை அரித்துக்கொண்டிருக்கும் வெறியாக மாறியது. கற்குகையை கண்டுபிடிப்பது இலகு. ஆனால், அந்த இளம் பெண் எங்கே இருக்கிறாள்? அப்படியான பெண் உண்மையில் வாழ்கிறாளா? அல்லது இது அவனுடைய குழம்பிப் போன மனதின் வெறும்கற்பனையா? அவளை அவன் பூந்தோட்டங்கள், குளக்கரைகள், கோயில்கள், படத் தியேட்டர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் தேடுகிறான். இந்த ஜதீகப் பெண் அவன் கனவுகளில் தோன்றி அவனை இம்சைப்படுத்துகிறாள்.

கடைசியாக அவன் மனோவியாதியில் வீழ்ந்துவிடுவானோ என்ற பயமே, அவளை பூரணமாக தன் மனதிலிருந்து அப்புறப்படுத்திவிட வைக்கிறது. ஆனால், ஓர் ஆற்றங்கரையில் தோணிக்காகக் காத்துக் கொண்டிருந்தபோது அங்கே அவள், ஓலைச் சுவடியில் கூறப்பட்ட அந்தப் பெண், நாடியிலும் கழுத்திலும் மச்சங்களோடு, காற்று வெளியிலிருந்து திடீரென உண்டாக்கப்பட்டவள் போல் நிற்கிறாள்.

## குருதி

பாலைவனத்தில்
இரத்தச் சகதி
உடல் கிழிந்து
கொப்பளிக்கும் குருதி
புழுதியை அடக்கி
சாறில்லா பேரீந்தில்
இரத்தச் சாறு
வெறி நாயென
அமெரிக்கப் படைகள்
உலர்ந்த நாவில்
ஈரம் நனைக்க
ஈராக்கியர் செங்குருதி

- எஸ்ஜே.



**வன்னிப் பிரதேச கலை, இலக்கிய முயற்சிகள் பற்றி கலைக்கழகம் அண்மையில் நடத்திய கருத்தரங்க நாடக நாள் அமர்வில் நாடகச்செல்வர் எஸ்.பீ.அரசு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட காட்சி.** (ஐ)

## வீரவணக்கம்

நல்லூர் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்
தோழர் திரு.செல்வரத்தினம் சுதன்
அவர்களின் அன்புச் சகோதரன்

**செல்வரத்தினம் ஜெகன்**
**[போசன் (சிந்து) நவநீதன்]**

அவர்கள் 10.03.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பலை தாக்கியழித்தபோது வீரச்சாவடைந்தார்.

இவருக்கும், இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.
(15875)

## மீள்குடியமர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்23

இடம்பெயர்ந்தோர் நலன்காக்கும் சங்கத்தின் ஏற்பாட்டில் மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு துாற்கட்டை சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பூம்புகார் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறும். இந்தக் கலந்துரையாடலில் நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு (முனங்கு) ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஜே/90 கிராம அலுவலர் பிரிவு மக்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைகளுடன் வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
17 - 06 - 1929

மறைவு
21 - 02 - 2003

**அமரர் இரத்தினபூபதி தர்மலிங்கம்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் இவரின் சகல சடங்கு நிகழ்வுகளிலும் வருகை தந்துதவிய அன்பு நெஞ்சங்களுக்கு எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*10, துரைராசா வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(15874)
- குடும்பத்தினர்.

## விருதுகள் வழங்கும் விழா

**பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கும் நன்கொடை வைபவம்**

காலம் : நாளை (24.03.2003) திங்கட்கிழமை
நேரம் : பிற்பகல் 1.30 மணி
இடம் : குமாரசுவாமி மண்டபம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

*பிரதம விருந்தினர்*
**திரு.வெ.இளங்குமரன்**
(பொறுப்பாளர், தமிழீழ கல்விக்கழகம்)

2001ஆம், 2002ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் **(INTERACTORS, ROTARACTORS)** வழங்கப்படும்.

லண்டன் LADDER நிறுவனம் பாடசாலைகளுக்கு நன்கொடையளிக்கும் பெறுமதிவாய்ந்த நூல்களின் பரிசளிப்பு இடம்பெறும்.

இன்றறக்ற் கழகம் இயங்கும் பாடசாலைகளின் சகல இன்றறக்ற் கழக அங்கத்தவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தயவுசெய்து தவறாது சமுகமளிக்கவும்.

இப்பாடசாலைகளின் அதிபர், உப அதிபர், ஆசிரியர்களும் தயவுசெய்து இந்த அழைப்பினை யேற்று சமுகமளித்து எம்மை ஊக்கப்படுத்தும்படி வேண்டுகின்றோம்.

நூல்கள் அன்பளிப்புப் பெறும் பாடசாலைகளும் தயவுசெய்து இந்த அழைப்பினையேற்று தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**றோட்டறிக்கழகம் - யாழ்ப்பாணம்**
**ROTARY CLUB - JAFFNA.**
(சி-37065)


## மங்களகரமான வைபவங்கள், மகாநாடுகளுக்கு...
**(Parties,Functions And Conferences)**

திருமண வைபவம், பிறந்த நாள் கொண்டாட்டங்கள், விசேட வைபவங்கள், மங்களகரமான நிகழ்ச்சிகள் மற்றும் மகாநாடுகள் (Conferences) ஆகிய நிகழ்ச்சிகளைச் சிறப்புடன் நிறைவேற்ற குளிரூட்டப்பட்ட மண்டபம், திறந்த வெளி, புற்தரைப் பூங்கா, கீழ்க்காணும் சகல வசதிகளுடனும் ஒழுங்குகள் செய்துதரப்படும். சுவையான சிற்றுண்டி, தேநீர், குளிர்பானம், மதியபோசனம், இராப்போசனம் முதலான சகல வசதிகளுக்கும் நாடவேண்டிய இடம்:

**பிள்ளையார் ரூறிஸ் இன்**
**PILLIAR TOURIST INN (stores)**

போக்குவரத்துத் துறையில் நீண்டகால அனுபவம் உள்ள முன்னோடி பிரயாண முகவர்களான பிள்ளையார் ஸ்ரோர்ஸ், விமானப் பயணச் சீட்டுக்களை விசேட சலுகைகளுடன் வழங்குவார்கள். இவைகளுக்கு நாடவேண்டிய இடம்:

**PILLIAR STORES**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021-222-2329
தொலைநகல்:- 021-222-5595
(15872)



## பதவி வெற்றிடங்கள்

காப்புறுதித்துறையில் முன்னோடியாகத் திகழும் ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு ஆர்வமும், துடிப்பும் மிக்க **பிரதேசப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.**

வயதெல்லை : 21 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் திறமைச் சித்தியுட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
நேர்முகத் தேர்வு: 29.03.2003 சனிக்கிழமையும் 30.03.2003 ஞாயிற்றுக்கிழமையும்

காலை 9.00மணிமுதல் 1.00 மணிவரை எமது அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்வின்போது சுயவிவரக் கோவையுடன் சமுகந்தரவும்.

**ஜனசக்தி காப்புறுதி கம்பனி லிமிட்டட்**
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(15869)


## முப்பாத மனமுருகும் அம்மா உன் நினைவு



**அமரர் எம் அன்னை**
**தம்பிப்பிள்ளை இராசமணி**

*கருவிலுருவாக்கி உதிரம் தனையூட்டி*
*கருணையுடன் எம்மை மடியில் தாலாட்டி*
*பெருமை தருவாழ்வு பாரில் எமக்கீய்ந்து*
*பெருகும் துயரிலெமை இன்று தவிக்கவிட்டு*
*பெரும்பே றடைந்தந்த பரமனடி நாடி*
*வரும்காலம் எமக்குய்ய வரம்பெறச்சென்றீர்களோ?*
*அருகிலிருந் தெமக்கு ஆறுதலாய் ஓர்வார்த்தை*
*தரும் காலமினி தவமிருந்தும் வந்திடுமோ?*

*கொஞ்சமும் குறைவறியா நிறைவான உங்களன்பில்*
*நெஞ்சம் நிறை உவகை கொண்டு நாம் பூரித்தோம்*
*மஞ்சம் துயில் கொள் நல் உயர்வாழ்வு வாழ்ந்திடினும்*
*கொஞ்சமும் இல்லையம்மா நிறைந்திடும் மனஅமைதி*
*வஞ்சமில்லா உம் நிழலில் அன்று நாம் வாழ்ந்தது போல்*
*அஞ்சுதல் இன்னதென்று அறியாமல் வாழ்ந்திருந்தோம்*
*நெஞ்சம் இன்று வேகுதம்மா அன்றணைத்த கரமெங்கே*
*தஞ்சமென்று நாமடைய இனியாமக்கார் தரணியிலே.*

**The Express Institute**
Irupalai, Kopay.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(சி-37064)


## சம்பந்தர் - டேடன்ஸ் பரிசோதனை சேவை
**Sampanthar - Durdans Diagnostic Services**

இலங்கையின் முன்னணி வைத்தியத்துறை நிறுவனம் டேடன்ஸ் (DURDANS) உம், யாழ்.நகரின் முன்னணி வைத்திய நிபுணத்துவ சேவை சம்பந்தர் கிளினிக்கும்.
(இலங்கை வங்கிக்கு அண்மை)
இணைந்து வழங்கும்

எல்லாவகை இரத்த, சிறுநீர் மற்றும் உடற்கூற்றியல்
சோதனைகள்:- Hematology, Histology, Biochemistry, Antibody Studies, Hormone Profile, Pap Smears

★ தரமான அதி நவீன சேவை
★ துரித சேவை
★ மிகக் குறைந்த கட்டணம்

*தொடர்பு:*
**Durdans Sampanthar Diagnostic Services**
(இலங்கை வங்கிக்கு அண்மை, பின்கட்டடம்)
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி / தொலைநகல்: 021 - 222 3721
(சி-37063)